# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 20 சுபகிருது வருடம், ஆடி மாதம் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(19.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 19, 0115886187 - பக்கங்கள் 12 விலை ரூ.50


## ஜனாதிபதி தெரிவுக்கான வேட்புமனுத்தாக்கல் இன்று

### நாடாளுமன்ற வளாகத்தில் உச்சகட்ட பாதுகாப்பு

(யோ.தர்மராஜ்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகியதையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு இடைக்கால ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்புக்கு தேவையான வேட்புமனுக்கள்...

02 பக்கம்

## மக்கள் மீது விசிறிய தண்ணீருக்கான கட்டணத்தைச் செலுத்தாத பொலிஸார்

வெளியானது புதிய தகவல்

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின்போது போராட்டக்காரர்களை கலைக்கப் பயன்படுத்திய தண்ணீருக்காக நீர்வழங்கல் சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை பொலிஸார் இன்னும் செலுத்தவில்லை.

இந்தப் போராட்டத்தின்போது...

02 பக்கம்

## அவசரகால நிலை பிரகடனம்; நேற்றுமுதல் அமுலானது!

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கையில் பொது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில், பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நேற்றுமுதல் இலங்கை முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான...

02 பக்கம்

## எம்.பிக்களுக்கு அச்சுறுத்தலா?

### சி.ஐ.டி. விசாரணை

நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தும் வகையிலான அறிவித்தல்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுவதை அவதானிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02 பக்கம்

## பஸ் கட்டணங்களில் திருத்தமா?

### தனியார் பஸ் சங்கங்கள் ஆராய்வு

எரிபொருள் விலை திருத்தத்திற்கமைய பஸ் கட்டணத்தை குறைக்கத் தயார் என தனியார் பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பஸ் கட்டணத்திருத்தம் தொடர்பான தேசிய கொள்கையின் அடிப்படையில் பஸ் கட்டணங்கள் திருத்தப்பட வேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

டீசல் விலை 4 வீதத்தால் திருத்தப்பட்டால், தேசிய கொள்கையின் அடிப்படையில் பஸ் கட்டணத்தில்...

02 பக்கம்

## வேட்புமனுவை மீளப் பெறத் தயார்

### நிபந்தனைகளுடன் அநுர அறிவிப்பு

எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல் இல்லாத இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மற்றும் பிரதமராக நியமித்தால் ஜனாதிபதி வேட்புமனுவை மீளப் பெறத் தயார் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்றி ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிப்பது தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சில அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் ஒருமித்த கருத்துக்கு வர...

02 பக்கம்

# ‘ரணில் கோ ஹோம்’ போராட்டம் ஆரம்பம்!

### நாட்டை முடக்கி எதிர்ப்புத் தெரிவிக்க தொழிற்சங்கங்கள், பல்கலை மாணவர்கள் ஓரணியில்

(யோ.தர்மராஜ்)

பதில் ஜனாதிபதியை பதவி விலகுமாறுக் கோரி இன்று முதல் தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தொழிற்சங்கங்களும் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியமும் தீர்மானித்துள்ளன. நாட்டை சீரழித்துள்ளதாகக் கூறி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு, நாடு பூராகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவர் பதவி விலகாது, முன்னாள் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு அறிவித்து, அவர்கள் பதவி விலகியதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்து, புதிய அரசாங்கத்தை நியமித்தார்.

இதனைத் தொடர்ந்து கோட்டா – ரணில் அரசாங்கத்தை பதவி விலகுமாறு போராட்டங்கள் வலுபெற்றன. கடந்த 9ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியபோதிலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க...

02 பக்கம்

## 21ஆம் திகதிமுதல் எரிபொருள் விநியோகம் புதிய நடைமுறையில்

தேசிய எரிபொருள் பாஸ் நடைமுறையின்படி எதிர்வரும் வியாழன் (21)முதல் எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்பதை சிபெட்கோ பொருட்படுத்தாது எனவும் பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார ராஜபக்ஷ நேற்றுக் (18) காலை தெரிவித்தார்.

வியாழன் முதல் கிவ்ஆர் குறியீடு, வாகனத்தின் பதிவு இலக்கத்தின் அடிப்படையில் மட்டுமே எரிபொருள் விநியோகிக்கப்படும் எனத் தெரிவித்த குமார ராஜபக்ஷ, தற்போது வரிசையில் நிற்கும் மக்களை வெளியேறுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, வாகனப் பதிவு இலக்கத்தின் கடைசி இலக்கமான 0, 1 மற்றும் 2 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகன உரிமையாளர்கள் மாத்திரம் எதிர்வரும் 21ஆம் திகதி எரிபொருளைப் பெற வருமாறு குறிப்பிட்டார்.

## இலங்கைத் தமிழர்களுக்கு நீதி வழங்கும் நோக்கில் புதிய தீர்மானத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டும்

### பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தல்

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

இந்திய நாடாளுமன்றத்தின் இந்த கூட்டத்தொடரில் தமிழர்களுக்கு நீதி வழங்கும் நோக்கிலும், இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும் புதிய தீர்மானத்தை இந்திய அரசே கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று பாட்டாளி

02 பக்கம்

## ஈஸ்ரர் தின தாக்குதல்கள் குறித்து மீள்விசாரணை நடத்த ஆலோசனை



### பிரிட்டனின் உதவியுடன் மேற்கொள்ளப்படுமென ரணில் அறிவிப்பு

(யோ.தர்மராஜ்)

ஈஸ்டர் தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை இங்கிலாந்தின் உதவியுடன் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆலோசிக்கப்படுவதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டை கட்டியெழுப்புவதற்கு...

02 பக்கம்

## டலஸ் - சஜித் பேச்சில் இணக்கமில்லை

(யோ.தர்மராஜ்)

இடைக்கால ஜனாதிபதி பதவி தொடர்பாக, சஜித் பிரேமதாச மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளது.

ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளர்களாகவுள்ள டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் தமக்கு மிக நெருங்கிய சிலருடன் கொழும்பில் இரகசிய சந்திப்பொன்றை நேற்று (18) நடத்தியுள்ளனர்.

இதன்போது, டலஸ் அழகபெரும ஜனாதிபதியாகவும் சஜித் பிரேமதாச பிரதமராகவும் போட்டியிட்டால் குறைந்தது 135 வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியும் என டலஸ் தரப்பினர் ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளனர்.

மும்முனைப் போட்டி ஏற்பட்டால், சஜித், ரணில், டலஸ் ஆகிய மூவரில் எவருக்கும் 50 வீதமான...

02 பக்கம்



இப்படியும் ஒரு போக்குவரத்து...

(படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன )

## வாக்களிக்க வரும் எம்.பிக்களுக்கு இராணுவ முகாமில் எரிபொருள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு வசதியாக அவர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து எரிபொருளை பெறுவதற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தம்மால் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியவில்லை என பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்ததன் பிரகாரம், எரிபொருளை பெற்றுக்கொள்ள இவ்வாறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதற்காக நாடாளுமன்றத்திற்கு வரும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி,...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

‘ரணிலா, சஜித்தா, அநுரவா? எண்டு அவங்களுக்கு பிரச்சின

சோறா, பாணா, ரொட்டியா எண்டது நம்மட பிரச்சினை..’



## இலங்கை வந்தடைந்த எரிபொருள் கப்பல்கள்

எரிபொருளை தாங்கிய நான்கு கப்பல்கள் இலங்கையை வந்தடைந்துள்ள நிலையில், அவற்றில் இருந்து எரிபொருளை விடுவித்து விநியோகிக்கும் பணிகள் தொடர்பில் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில், இரண்டு கப்பல்களில் இருந்து டீசலை விடுவிக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது ட்விட்டர் தளத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இன்று முதல் நாடு முழுவதும் உள்ள எரிபொருள்...

02 பக்கம்

## அவசரகால நிலை பிரகடனத்தை நீக்கக் கோரும் சட்டத்தரணிகள் சங்கம்

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை பிரகடனத்தை உடனடியாக நீக்க வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கருத்து வெளியிடும் உரிமை, பேச்சுச் சுதந்திரம், சுதந்திரமாக ஒன்றுகூடுவதற்கான உரிமை உள்ளிட்டவற்றை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பதில் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளது.

இவை மக்களின் இறைமை எனவும்...

02 பக்கம்



### உஷ்

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவை, பாதுகாப்பமைச்சின் செயலாளர் பதவியில் அமர்த்த ஆலோசித்துள்ளாராம் ரணில். அதேபோல் பொலிஸ், முப்படைகளின் உயர்பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளனவாம்.

# வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்புவதற்கு கட்டுப்பாடில்லை

## அமைச்சரவை தீர்மானம்

பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்துவரும் நிவாரணப்பொருட்கள் மற்றும் நிதிக்கு வரி விலக்களிக்கவும் கட்டுப்பாடுகளை விதிக்காதிருக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நாடாளுமன்ற குழு அறை இலக்கம் 4 இல் நேற்று அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் நிவாரணப்பொருட்கள் மற்றும் நிதிக்கு வரிவிலக்களிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரவுள்ளது.

### ஜனாதிபதி தெரிவுக்கான...

இன்று (19) தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதனால், வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படும் தினம் மற்றும் வாக்கெடுப்பு நடத்தும் தினத்தில் நாடாளுமன்றத்திற்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னான்டோ தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த 14 ஆம் திகதி பதவியிலிருந்து விலகியதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கான இடைக்கால ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்வதற்கான வேட்புமனுக்களே இன்று (19) நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதற்கமைய, ஜனாதிபதியை தெரிவுசெய்யும் சட்டமூலத்துக்கு அமைய, புதிய ஜனாதிபதி தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் நாளைய தினம் (20) வரை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் வேறெந்த விடயங்களும் உள்ளடக்குவதற்கு அனுமதியில்லை. அதன்படி, இன்றும் நாளையும் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவு மாத்திரமே இடம்பெறும்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் இன்று ஆரம்பிக்கப்பட்டவுடன், நாடாளுமன்ற செயலாளரினால் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவோரின் பெயர்களை முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர், அந்தந்த கட்சிகள் தங்களுடைய வேட்பாளரின் பெயரை முன்வைக்க வேண்டும். பெயர் முன்வைக்கப்பட்ட குறித்த உறுப்பினர், நாடாளுமன்றத்திற்கு சமூகமளித்திருக்க வேண்டும். அவ்வாறில்லையேல், அந்த வேட்புமனு நிராகரிக்கப்படும்.

பின்னர், ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் உறுப்பினர், தான் போட்டியிடுவதற்கு விரும்புகின்றேன் என்பதை எழுத்து மூலமாக, நாடாளுமன்ற செயலாளருக்கு முன்வைக்க வேண்டும். அதன்படி, சபாநாயகரை தவிர ஏனைய 224 பேருக்கும் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிட முடியும். அதற்கான வரையறைகள் குறிப்பிடப்படவில்லை. பதவிக்கு போட்டியிடுவதற்கு சபாநாயகரால் முடியாது என்றாலும், தான் விரும்பும் எந்தவொரு வேட்பாளருக்கும் அவர் வாக்களிக்க முடியும்.

இந்த நிலையில், வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும ஆகியோர் விருப்பம் தெரிவித்துள்ளனர். எனினும், பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கே தங்களுடைய ஆதரவு வழங்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் ஒருவர் போட்டியிடும்போது, கட்சி அவருக்கே ஆதரவளிக்க வேண்டும். மாறாக, வேறெந்த உறுப்பினருக்கும் ஆதரவளிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். ஆனால், இந்த விடங்கள் குறித்து பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் தாங்கள் ஆதரவளிக்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது. எனினும், தாங்கள் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து 10 சுயாதீன குழுக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை. இது குறித்து முடிவுகள் இன்று எடுக்கப்படலாம் என்றும் அறிய முடிந்தது.

இந்த நிலையில், வேட்புமனு தாக்கல் செய்யப்படும் இன்றும் வாக்கெடுப்பு நடத்தப்படும் நாளையும் நாடாளுமன்றத்திற்குள்ளும் அதற்கு வெளியிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், புலனாய்வுத்துறையின் ஒத்துழைப்புகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

### எம்.பிக்களுக்கு...

அவ்வாறான அறிவித்தல்களை பகிரும், தயாரிக்கும் மற்றும் செம்மைப்படுத்துவோர் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய, பொலிஸ் தலைமையகம் கண்காணித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ், சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

### வேட்பு மனுவை...

ஒப்புக்கொண்டாலும் இப்போது அவர்களின் நிலைப்பாடு மாறிவிட்டது.

எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்றி ஜனாதிபதியையும் பிரதமரையும் நியமித்து, குறுகிய காலத்திற்கு சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கி தேர்தலுக்கு செல்வோம் என முன்மொழிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்பார்வையிட அல்லது மத்தியஸ்தம் செய்வதற்கு காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களை உள்ளடக்கிய ஒரு சபையை நியமிக்கவும் முன்மொழிந்ததாக அவர் கூறியுள்ளார்.

அவ்வாறான உடன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சியை தாங்கள் முற்றாக கைவிடவில்லை எனத் தெரிவித்த அவர், அவ்வாறான இணக்கப்பாடு எட்டப்பட்டால் இறுதி நேரத்திலும் வேட்புமனுவை மீளப் பெறத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாவதற்கு முயற்சித்து வருவதாகவும் அவரது நகர்வுகள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

### வாக்களிக்க வரும்...

முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சமூக ஊடகங்கள் ஊடாக பல்வேறு குழுக்கள் எம்.பி.க்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதால், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பு காரணமாக நாடாளுமன்றம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸாருக்கு மேலதிகமாக முப்படையினர் அடங்கிய குழுக்களும் பாதுகாப்பிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### மக்கள் மீது விசிறிய...

பொலிஸாரால் பெருமளவிலான தண்ணீர் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீர்த்தாரை பீரங்கிகளை இயக்குவதற்கான தண்ணீரைப் பயன்படுத்தியதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு பொலிஸ் திணைக்களம் இன்னும் பணம் செலுத்தவில்லை என பொலிஸ் அதிகாரி மேலும் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, பொலிஸ் நிலையங்களில் இருந்து கொழும்புக்கு கண்ணீர் புகைக் குண்டுகளை கொண்டுவருவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களின்போது பெருமளவிலான கண்ணீர் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதால், கொழும்பு பொலிஸ் நிலையங்களில் குறைந்த எண்ணிக்கையிலான கண்ணீர் புகைக்குண்டுகள் மட்டுமே எஞ்சியுள்ளன என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

எனவே, மற்ற பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களில் தங்கள் இருப்புக்களை கொழும்புக்கு அனுப்புமாறு நாங்கள் கேட்க வேண்டியிருந்தது என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

### அவசரகால நிலை பிரகடனத்தை...

அதனை அரசாங்கமோ, முகவர்களோ மீறுவதற்கு இடமளிக்க வேண்டாமெனவும் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அவசரகால நிலை...

பொருட்கள் மற்றும் சேவைகளைப் பேணுதல் ஆகியவற்றின் நலன்களுக்காக இலங்கையில் பொது அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

### பஸ் கட்டணங்களில்...

திருத்தம் செய்யப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், பேருந்துகளை இயக்குவதற்கு போதுமான எரிபொருள் கிடைத்தால் பேருந்து கட்டணத்தை குறைக்க தயாராக இருப்பதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

### இலங்கை வந்தடைந்த...

நிரப்பு நிலையங்களுக்கு புகையிரதங்கள் மற்றும் எரிபொருள் தாங்கிகள் மூலம் எரிபொருள் கையிருப்பு விநியோகிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மற்றொரு எரிபொருள் கப்பலில் இருந்து கொண்டுவரப்பட்ட டீசல் கையிருப்பை இறக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 35,000 மெற்றிக் தொன் பெற்றோல் கொண்ட கப்பலானது தர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அந்த நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அநேகமாக இன்று கப்பலில் இருந்து எரிபொருள் இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### டலஸ் – சஜித்...

வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாது என்பதுடன், இரண்டாவது விருப்பு வாக்கின் அடிப்படையில் வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவார் எனவும் டலஸ் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, டலஸ் தரப்பு முன்வைத்த புள்ளி விபரங்கள் மற்றும் தரவுகளினால் திருப்தியடையவில்லை என்பதோடு, சஜித் பிரேமதாச, தனித்து போட்டியிடுவதிலிருந்து பின்வாங்குவதற்கு விரும்பவில்லை எனவும் அறியமுடிந்தது.

குறிப்பாக, ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவே, சஜித் பிரேமதாசவுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் போட்டியிடா விட்டால், தான் போட்டியிடுவதுடன், கட்சியின் தவிசாளர் பதவியை இராஜினாமா செய்வதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியுள்ளதனாலேயே சஜித் பிரேமதாச, தனித்து போட்டியிடுவதிலிருந்து பின்வாங்க விரும்பவில்லை என்றும் அறிய முடிந்தது.

எது எவ்வாறாயினும், டலஸ் அழகபெரும மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் பொதுவான இணக்கப்பாடு ஏற்படாதமையினால், இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு மீண்டும் இரு தரப்பும் சந்திப்பதற்கு தீர்மானித்திருந்தாக கட்சி வட்டாரத் தகவல்கள் 'தமிழன்' செய்திகளிடம் உறுதிப்படுத்தின.

### 'ரணில் கோ ஹோம்'...

பதவி விலகவில்லை.

இதனால், அவர் தற்போது பதில் ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்டுள்ளார். எனினும், அவரையும் பதவியிலிருந்து விரட்ட வேண்டும். அவர் பதவி விலகும்வரை போராட்டங்கள் கைவிடப்படாது என்ற கோஷத்தோடு, காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தங்களுடைய போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், வெற்றிடமாகவுள்ள ஜனாதிபதி பதவிக்கான தெரிவு நாடாளுமன்றத்தில் நாளை (20) வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளன. அதற்கான, வேட்பு மனுத் தாக்கல் இன்று நாடாளுமன்றத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிலையில், பதில் ஜனாதிபதியாகவுள்ள ரணில் விக்ரமசிங்கவும் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவார் என்பதால், அவரை உடனடியாக பதவியிலிருந்து விலகுமாறுக் கோரிய, அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம், தொழிற்சங்க கூட்டு சம்மேளனம் போன்றன இன்று முதல் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளன.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவிடம் வினவியபோது,

ராஜபக்ஷக்களின் தரகராக செயற்படும் பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பதவி விலக வற்புறுத்தி இன்று தீவிர போராட்டங்களில் ஈடுபட அழைப்பு விடுத்துள்ளோம்.

இன்று முதல் அண்மைய நகரங்களுக்கு வந்து போராட்டங்களை நடத்துமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். முழு நாட்டையும் போராட்டக் களமாக மாற்றுவதன் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்கியதை போல, ராஜபக்ஷக்களின் தரகராக செயற்படும் ரணிலை பதவிவிலக்க முடியும்.

ரணில் விக்ரமசிங்கவை பதில் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்குவதற்கு தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புகளும் பாரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன், போராட்டத்தை வெற்றியுடன் முடிக்க முடியும் - என்றார்.

தொழிற்சங்க கூட்டு சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்கவிடம் வினவிய போது,

ரணில் விக்ரமசிங்கவை பதவியிலிருந்து விலக்குவதற்கான போராட்டத்தை நாங்கள் இன்று (நேற்று) முதல் ஆரம்பித்துள்ளோம். இந்த போராட்டம் அடுத்த மூன்று நாட்களுக்கு தொடர்ந்து இடம்பெறும். போராட்டத்தின் போது, ஊரடங்கு அல்லது அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி எங்களை முடக்க முயற்சித்தாலும் எங்களுடைய போராட்டங்கள் தொடரும். ரணில்விக்ரமசிங்கவை பதவியிலிருந்து நீக்கிவிட்டே எங்கள் போராட்டத்தை கைவிடுவோம் - என்றார்.

### ஈஸ்ரர் தின...

பல வருடங்கள் தேவையில்லை. அனைத்து கட்சிகளும் இணைந்து செயற்பட்டால் அடுத்த ஓரிரு வருடத்தில் நாட்டை கட்டியெழுப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் நிலைமைகள் குறித்து நேற்று (18) நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மே 13ஆம் திகதி தாம் பிரதமராகப் பதவியேற்றபோது, நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் மின்வெட்டு ஏற்பட்டதன் மூலம் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பின்னர் இரண்டு மாதங்களில் மின்சாரம் 3 மணித்தியாலங்களாக குறைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டுள்ளதோடு, பெரும் போகத்துக்கான உரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கையும் எடுத்துவருகின்றோம் எனவே, பெரும்போகத்தின்போது, உணவில் தன்னிறைவு அடைவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டில் தொடர்ந்து எரிவாயுவை வழங்க முடியும். அதில் எவ்வித பிரச்சினையுமில்லை. அதேபோன்று, டீசலையும் தடையின்றி வழங்க முடியும். எனினும், பெற்றோல் விநியோகத்தில் பிரச்சினை காணப்பட்டன. அதன்படி, நான் ஏற்கனவே, கூறியது, போன்று, ஜூலை மாதம் எரிபொருள் விநியோகத்திற்கு கடினமான காலமாக இருக்கும். எனினும், 21ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து பெற்றோலை வழங்கமுடியும். இதேவேளை, உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ளதால், அதன் இலாபத்தை நுகர்வோருக்கு வழங்குவோம்.

அதேபோன்று, 2 ஏக்கருக்கும் குறைவான வயல்களை பயிரிட்ட நெற்செய்கை யாளர்களின் விவசாய கடன் ரத்துசெய்யப்பட்டுள்ளது. பாடசாலைகள் திறக்கப்படவிருக்கின்றன. பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. நட்பு நாடுகளின் உதவிக்கான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

குறிப்பாக, பொருளாதார வீழ்ச்சியால் எங்களுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதனை எதிர்கொள்ள நாங்கள் மாற்றுவழிகளை தயாரிக்க வேண்டும். உணவுகளை பெற்றுக் கொள்ள முடியாது, நெருக்கடியில் இருக்கும் வருமானம் குறைந்தவர்களுக்கு உணவு வழங்க நடவடிக்கை எடுத்துவருகின்றோம். உணவு பாதுகாப்பு திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இதேவேளை, ஈஸ்டர் தின தாக்குதலின் விசாரணைகள் முழுமையடையாதது குறித்து அனைவருக்கும் பிரச்சினையுள்ளது. ஆனால், இந்த பிரச்சினையை தீர்ப்பதே என்னுடைய நோக்கமாகும். தொடர்ந்து இந்த பிரச்சினையை இழுத்துக்கொண்டிருக்க முடியாது. ஆணைக் குழுவின் அறிக்கைக்கு அப்பால், மேலும் சில அறிக்கைகள் இருக்கின்றன. எனவே, மீண்டும் இந்த விசாரணைகளை ஆரம்பிக்க ஆலோசிக்கப்படுகின்றன. அதற்காக, இங்கிலாந்து அரசாங்கம் மற்றும் அவர்களின் புலனாய்வு சேவைகளின் உதவியை கோருவதற்கும் எதிர்பார்த்துள்ளோம். இது இந்த நாட்டிலுள்ள மக்களை பிளவுப்படுத்திய பாரிய பிரச்சினையாகும். இதனை தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு, 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் அமுல்ப்படுத்துவதற்கான சட்ட மூலத்தை தயாரிக்குமாறு வலியுறுத்தியுள்ளேன். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே காணரமாக இருப்பதால், 19 ஆவது திருத்தத்திற்கு பின்னர் அது குறித்து பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

நாட்டின் சட்டத்தை மீறுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், அதற்கு எதிராக நாங்கள் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும். சட்டம் ஒழுங்கை சீர்குலைப்பதற்கு பாசிசவாதத்துக்கு இடமளிக்க முடியாது. அமைதியான போராட்டக்காரர்கள் பிரச்சினைகள் அவர்களுக்கான தீர்வுகள் வழங்கப்படும். மாற்றம் வேண்டும் என்பதே என்னுடைய நிலைப்பாடாகும். நாட்டின் இளைஞர்கள் பெறுப்பேற்றால், அவர்களுக்கு ஏற்றவாறே அரச நிர்வாகத்தை மாற்றியமைக்க வேண்டும்.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தனிநபரின் கருத்து வேறுபாடுகளால் நாடு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க வேண்டாம். இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். அதற்கு பல வருடங்கள் தேவையில்லை. எதிர்வரும் வருடத்தில் நாங்கள் நல்ல நிலைமைக்கு வர முடியும். எனவே, அடுத்த இரு வருடங்களில் நாங்கள் அனைவரும் இணைந்து நாட்டை கட்டியெழுப்ப முடியும். எனவே, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் அனைத்துக் கட்சி ஆட்சியை அமைக்க வேண்டும் - என்றார்.

### இலங்கை தமிழர்களுக்கு...

மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:

"இலங்கை பொருளாதார நெருக்கடி குறித்தும், அந்த நாட்டிற்கு உதவுவது குறித்தும் தீர்மானிப்பதற்காக டெல்லியில் இன்று நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதேநேரத்தில் நிபந்தனைகள் இல்லாமல் செய்யப்படும் உதவிகள் அங்கு நிலவும் இனப்பாகுபாட்டை அதிகரிக்கவே வகை செய்யும் என்பதால், அதை உணர்ந்து மத்திய அரசு உத்திகளை வகுக்க வேண்டும்.

பாமக ஏற்கெனவே சுட்டிக் காட்டியவாறு இலங்கையில் பொருளாதார நெருக்கடி தானாக ஏற்பட்ட ஒன்றல்ல. ஈழத் தமிழர்களை முற்றிலுமாக அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கில் இராணுவத்திற்கு பெருந்தொகை செலவிடப்பட்டதும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான போருக்கு உதவிய நாடுகளுக்கு இலங்கையின் வளங்களை தாரை வார்த்ததும் தான் இன்றைய நிலைக்கு முக்கியக் காரணம்.

இந்தியா தவிர வேறு அண்டை நாடுகள் ஏதுமில்லாத இலங்கை ஒரு மிகப் பெரிய இராணுவத்தை பெரும் பொருட்செலவில் நடத்த வேண்டிய தேவை எதுவும் இல்லை.

வடக்கிலும் கிழக்கிலும் ஈழத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அச்சுறுத்தவே இலங்கையின் இராணுவம் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் போக்கை இலங்கை மாற்றிக் கொள்ளாத வரை இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் அந்த நாட்டு மக்களுக்கு உதவாது; மாறாக ராணுவத்திற்கு தீனி போடுவதற்கே உதவும். ஈழத் தமிழர்களுக்கு எதிரான செயல்களுக்கு இந்தியாவே நிதி உதவி அளிப்பது தீராதப் பழியாக அமைந்து விடக் கூடும்.

இத்தகைய பழியைத் தடுக்க வேண்டும் இலங்கை அரசுக்கு பல்வேறு நிபந்தனைகளை விதித்து அவற்றுக்கு அந்த நாட்டு அரசு உடன்படும் பட்சத்தில் மட்டுமே உதவிகளை வழங்க வேண்டும். அதிலும் குறிப்பாக இலங்கை மக்களின் அடிப்படைத் தேவைக்கான உணவு, மருந்து பொருட்கள், எரிபொருட்கள் உள்ளிட்ட உதவிகளைத் தான் இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்க வேண்டும். இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடிகளை கடந்த காலங்களில் எதிர்கொண்டு வந்த போதும் கூட, தமிழர்களுக்கு எதிரான இனவெறியை கைவிடவில்லை.

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனவெறித் தாக்குதல்கள் தொடர்வதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் 2022 பிப்ரவரி மாதம் தனது அறிக்கையில் குற்றஞ்சாட்டியது. இலங்கைப் போரின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எதற்கும் தீர்வு கிடைக்காத நிலையில், இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிலைமை மோசமடைந்து இருப்பதாக அந்த அறிக்கை கூறியது.

இனவெறி கோட்பாட்டை ஒழிக்காதவரை இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் விழலுக்கு இறைத்த நீர் போல வீணாகும். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக தொடரும் இனவெறி வன்முறைகளுக்கு முடிவுகட்டாமல், பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு ஏற்படாது. வடக்கு கிழக்கிலிருந்து ராணுவத்தை குறைத்தல், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்தல், தமிழர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுதல் உள்ளிட்டவை தொடர்பாக இலங்கையிடம் வாக்குறுதிகளைப் பெற்று அதனடிப்படையில் மட்டும் தான் இலங்கைக்கு மனிதாபிமான உதவிகள் தவிர்த்து மற்ற உதவிகளை இந்தியா செய்ய வேண்டும்.

இதையே இந்தியாவின் கொள்கையாக அறிவிப்பது குறித்து நாளைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்க வேண்டும். இலங்கையில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த பிறகு 120-க்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் வாழ வழியின்றி தமிழகம் வந்துள்ளனர். அவர்களை அகதிகளாக அறிவிக்க முடியாததால் அவர்களுக்கு எந்த உதவியையும் தமிழக அரசால் வழங்க முடியவில்லை. இது குறித்த தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, அகதிகளாக அறிவிப்பதற்கான விதிகளை தளர்த்தி, அவர்களை அகதிகளாக அறிவிப்பது குறித்தும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத்திய அரசு சாதகமான முடிவை எடுக்க வேண்டும்.

மற்றொருபுறம், இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து 2021 மார்ச் 23ம் தேதி ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இறுதி அறிக்கை வரும் செப்டம்பர் 12ம் தேதி ஐநா மனித உரிமைகள் பேரவையின் 51ம் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்படவுள்ளது. மேலும், இலங்கை மீதான புதிய தீர்மானம் வரும் அக்டோபர் 6ம் தேதி நிறைவேற்றப்படும் வாய்ப்பு உள்ளது.

இக்கூட்டத்தொடரின் போது, தமிழர்களுக்கு நீதி வழங்கும் நோக்கிலும், இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும் புதிய தீர்மானத்தை இந்திய அரசே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். இது குறித்தும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, ஜூலை 19ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**


# ஜனாதிபதி தெரிவும் மக்கள் சக்தியும்

இலங்கை நாடாளுமன்றம் முதல் தடவையாக ஜனாதிபதியொருவரை நாளைய தினம் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்போகிறது. முன்னர் ஒரு தடவை ஜனாதிபதியை நாடாளுமன்றம் தெரிவு செய்திருந்தபோதிலும், வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. 1993 மே தினத்தன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து அன்றைய தினமே பிரதமர் டி.பி.விஜேதுங்க பதில் ஜனாதிபதியாக பதவியேற்றார். அரசியலமைப்பின் பிரகாரம் 7 நாட்களுக்குள் கூடிய நாடாளுமன்றம் ஏகமனதாக அவரை புதிய ஜனாதிபதியாக அங்கீகரித்தது. ஜனாதிபதியாக வருவதற்கு ஆசைப்பட்ட பல அரசியல்வாதிகள் அன்று இருந்தபோதிலும் பிரேமதாசவின் கொலையை அடுத்து தோன்றிய நெருக்கடியான சூழ்நிலையில் எவரும் அந்த பதவிக்கு போட்டியிடவில்லை. பிரேமதாசவின் எஞ்சிய ஒன்றரை வருட பதவிக்காலத்துக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்துவிட்டு விஜேதுங்க அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுக்கொண்டார்.

மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டுத் தப்பியோடி சிங்கப்பூரில் இருந்து பதவி விலகல் கடிதத்தை அனுப்பியதையடுத்து காலியான ஜனாதிபதி பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தெரிவுசெய்வதற்கு நாளைய தினம் வாக்கெடுப்பு நடைபெறவிருக்கிறது. இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் அந்த தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அலுவலராக இருப்பார்.

பதில் ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரே இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்வார்கள் என்று நம்பப்படுகிறது.

எதிர்கால அரசியல் அபிலாஷை இல்லாத இரு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் நியமிப்பதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஏகோபித்து தீர்மானிக்க முன்வந்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகுவதற்கு தயாராயிருப்பதாக அநுரகுமார திசாநாயக்க அறிவித்திருந்தார் என்றபோதிலும் அதற்கான சாத்தியங்கள் இல்லை. எதிர்கால அரசியல் அபிலாஷை இல்லாத இருவரை கண்டுபிடிக்க முடியுமாக இருந்தாலும் கூட எமது நாடாளுமன்றத்துக்குள் கட்சிகளிடையே கருத்தொருமிப்பு ஏற்படுவது சாத்தியமேயில்லை. அவ்வாறான அரசியல் பக்குவமும், விவேகமும் எமது அரசியல்வாதிகளிடம் இருந்தால் நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியில் திணறிக்கொண்டிருக்கும் கடந்த நான்கு மாதங்களில் ஏதாவது ஒரு கட்டத்தில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தி சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்காக அவர்கள் கருத்தொருமிப்புடன் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க முன்வந்திருப்பார்கள்.

பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடி மிகுந்த இன்றைய சூழ்நிலையில் தேர்தல் போட்டிக்கு வழிவகுத்து அரசியல் கட்சிகளிடையே மேலும் முரண்பாடுகள் தீவிரமடைவதை தவிர்க்குமுகமாக புதிய ஜனாதிபதியை கருத்தொருமிப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யுமாறு பல்வேறு சிவில் சமூக அமைப்புகள் அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. எமது நாடாளுமன்ற அரசியலில் காணப்படுகின்ற வெறுப்புணர்ச்சி, சுயநலம் மற்றும் காழ்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் அவ்வாறு கருத்தொருமித்து ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கு கட்சிகளின் தலைவர்கள் முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. புதியதொரு அரசியல் கலாசாரம் தோற்றுவிக்கப்படவேண்டும் என்று மக்கள் கிளர்ச்சியின் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்ற முழு நாட்டினதும் அபிலாஷையை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அக்கறையுடன் நோக்க இன்னமும் தயாரில்லை. தொடர்ந்தும் அவர்கள் கட்சி அரசியலை முன்னெடுப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

சிவில் சமூக அமைப்புக்களின் வேண்டுகோளின் பிரகாரம் ஜனாதிபதியை கருத்தொருமிப்பின் அடிப்படையில் தெரிவுசெய்தால் நாடு இன்றைய படுமோசமான நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அவசியமான அரசியல் உறுதிப்பாட்டை ஓரளவுக்கேனும் ஏற்படுத்துவதற்கு சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது கூட எளிதாக இருக்கும் என்ற உண்மையை புரிந்துகொள்ளக்கூடியவர்களாக எமது அரசியல் தலைவர்கள் இல்லை என்பது பெருங்கவலை தருகிறது. இது இவ்வாறிருக்க, நாளைய தினம் புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்ட பிறகு கடந்த நான்கு மாதங்களாக இலங்கையின் அரசியல் அதிகார வர்க்கத்தை உலுக்கிவரும் மக்கள் கிளர்ச்சியை முன்னெடுத்துவரும் "அரகலய" போராட்டக்காரர்கள் எடுக்கக்கூடிய நிலைப்பாடு அடுத்து வரும் நாட்களில் அரசியல் நிகழ்வுப் போக்குகளை தீர்மானிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், அவரது முழு குடும்பத்தவர்களையும், அரசாங்கத்தையும் மாத்திரம் வீட்டுக்குப் போகுமாறு போராட்டக்காரர்கள் கேட்கவில்லை, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களையும் கூட பதவிகளைத் துறக்குமாறே அவர்கள் கேட்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்ற தேர்தலிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணைகள் வலுவிழந்துவிட்டதாகவே கருதுகிறார்கள். அதனால் மக்களின் ஆணையை இழந்துவிட்ட ஒரு நாடாளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்படுகின்ற ஜனாதிபதியை, அதே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பவர்களை உள்ளடக்கி அமையக்கூடிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை போராட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்ற கேள்வி எழுகிறது.

மறுபுறத்தில், புதிய ஜனாதிபதி பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்பதற்கு செயற்றிட்டம் ஒன்றை முன்வைப்பதற்கு கால அவகாசம் கொடுக்கப்படவேண்டும் என்ற ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது. கடந்த நான்கு மாதங்களில் இதுகாலவரையில் அரசியல் கட்சிகளினால் செய்யமுடியாததை மக்கள் சக்தி சாதித்துக் காட்டியிருக்கிறது. அதே மக்கள் சக்தியை அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு புதிய ஜனாதிபதிக்கும், நாடாளுமன்றத்துக்கும் நெருக்குதல்களை கொடுப்பதற்கு பயன்படுத்தமுடியும். அதாவது அரசியல் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி கால அவகாசம் ஒன்றை வழங்கலாம்.நாடாளுமன்ற தேர்தலையும், சர்வஜன வாக்கெடுப்பையும் ஒரே நாளில் நடத்துவதற்கு நேர அட்டவணையொன்றை தீர்மானிக்குமாறு அவரிடம் கேட்கலாம்.

புதிய அரசியல் கலாசாரத்தையும், முறைமை மாற்றத்தையும் வேண்டி நிற்கும் மக்கள் கிளர்ச்சி போராட்டக்காரர்கள் தங்களது இலக்கை நோக்கிய அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு அரசியல் வர்க்கத்துக்கு நெருக்குதலை கொடுப்பதற்கு தங்களது போராட்டத்தின் அடுத்த கட்டத்தை பயன்படுத்தமுடியும். ராஜபக்ஷவின் வீழ்ச்சியின் பின்னரான யுகத்தில் பழைய அரசியலுக்கு இடமிருக்கப்போவதில்லை. மக்கள் சக்தியை அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை உன்னிப்பாக இடையறாது அவதானித்துக்கொண்டிருக்கும் ஒரு பொறிமுறையாக தொடர்ந்து பேணவேண்டும்.



# உலக நாடுகளுக்கு ஒரு பாடம்!

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே படுகொலை செய்யப்பட்டிருப்பது உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்பெற்ற அரசியல் தலைவராகத் திகழ்ந்த ஷின்ஸோ அபேயை யார் கொல்ல நினைத்திருப்பார்?

ஜப்பானில் புகழ்பெற்ற யாசுகா என்ற வன்முறைக் கும்பல் உள்ளது. ஆனால், அந்தக் கும்பலால் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் ஏற்படாது. அடிக்கடி குற்றச்செயலில் ஈடுபடும் யாசுகாவினர் கூட துப்பாக்கியைப் பயன்படுத்த யோசிப்பார்கள். ஏனென்றால், சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தால் அதற்கான அபராதம் கூடுதலாக இருக்கும்.

ஜப்பானில் ஒருவர் துப்பாக்கி வைத்திருக்க வேண்டுமென்றால் அவர் மீது குற்ற வழக்கு எதுவும் இருக்கக் கூடாது. துப்பாக்கி சுடுவதற்குப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அவர் மனநிலை சோதனையில் ஈடுபடுத்தப்படுவார். பொலிஸார் அவரைப் பற்றி அக்கம்பக்கத்தினரிடமெல்லாம் விசாரிப்பார்கள். ஆகவேதான், அங்கு துப்பாக்கி குற்றங்கள் பெரிய அளவில் நடைபெறுவதில்லை.

ஒரு வருடத்திற்கு சராசரியாக பத்துக்கும் குறைவான துப்பாக்கிச்சூட்டு மரணங்களே அங்கு நடைபெறும். 2017 ஆம் ஆண்டில் வெறும் மூன்று மரணங்களே துப்பாக்கிச் சூட்டால் நடைபெற்றன. தற்போது அபேயை சுட்டதாக கைதுசெய்யப்பட்ட 41 வயது நபர் அந்நாட்டின் முன்னாள் தற்காப்புப் படை வீரர். இப்படை இராணுவத்திற்கு நிகரானது. அவர் கடற்படையில் வெறும் மூன்று ஆண்டுகள் மட்டுமே பணிபுரிந்திருக்கிறார். மேலும், அவர் பயன்படுத்திய துப்பாக்கி மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அது வீட்டில் செய்யப்பட்ட துப்பாக்கியைப் போல் இருந்தது. அது இணையத்தளத்தைப் பார்த்து செய்யப்பட்டதாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இது திட்டமிட்ட அரசியல் தாக்குதலா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

1960ஆம் ஆண்டில் ஜப்பானின் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இனேஜிரோ ஆசானுமா, வலதுசாரி நபர் ஒருவரால் சாமுராய் வாளால் வயிற்றில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். ஜப்பானில் தீவிர வலதுசாரி ஆதரவாளர்கள் இன்றும் இருக்கிறார்கள். இருப்பினும் வலதுசாரி தேசியவாதியான அபே தாக்குதல் இலக்காக வைக்கப்பட்டிருந்தது ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக ஜப்பானில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. தனிமையில் இருக்கும் நபர்கள் பிறரிடம் வன்மம் கொண்டு அதனால் ஏற்படும் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டு இருக்கின்றன.

2019ஆம் ஆண்டில் க்யூடூ என்னும் புகழ்பெற்ற அனிமேஷன் ஸ்டூடியோ கட்டடத்திற்கு ஒருவர் தீ வைத்ததில் 36 பேர் உயிரிழந்தனர். தீ வைத்தவர், தனது படைப்புகளை அந்த ஸ்டூடியோ திருடிவிட்டதால் அதன் மீது கோபமாக இருந்ததால் தீ வைத்ததாகத் தெரிவித்தார். இதுபோன்று 2008ஆம் ஆண்டு மனநிலை பாதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் டோக்கியோவின் அகிஹாபாரா மாவட்டத்தில் உள்ள கடைவீதியில் ட்ரக் ஒன்றை ஓட்டிச் சென்றார். பின் அங்குள்ளவர்களை கத்தியால் தாக்கினார். அதில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு முன்பு இணையத்தில் அவர், ''அகிஹபாராவில் உள்ள மக்களை நான் கொல்லுவேன். எனக்கு நண்பர்கள் யாரும் இல்லை. நான் அழகாக இல்லை என்பதால் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறேன். நான் குப்பையைக் காட்டிலும் கேவலமாக மதிக்கப்படுகிறேன்'' என்று பதிவிட்டிருந்தார்.

ஜப்பான் பாதுகாப்பான நாடாக இருந்தாலும், கட்டுப்பாடு நிறைந்த நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. தேர்தல் பிரசாரத்தின்போது அரசியல் தலைவர்கள் மக்களிடம் இயல்பாகப் பேசுவார்கள். சாலையில் நின்று உரையாற்றுவார்கள். இத்தகைய சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டுதான் அபேவை கொலையாளியால் நெருங்க முடிந்திருக்கிறது.

ஜப்பானின் அரசியல் வரலாற்றில் மோசமான நிகழ்வாக அபேயின் படுகொலை பார்க்கப்படுகிறது. அவர், தான் ஒரு தேசியவாதியா, யதார்த்தவாதியா என்ற விவாதத்தை தன் எதிர்ப்பாளர்களிடமும், ஆதரவாளர்களிடமும் தொடர்ந்து எழுப்பிக் கொண்டே இருந்தார். விமர்சிப்பவர்களுக்கு அவர் ஜப்பானின் தலைமைவாத சித்தாந்தத்தை ஆதரிப்பவர். சிக்கலான வெளியுறவுக் கொள்கைகளை ஆதரிப்பவர். ஆதரவாளர்களுக்கு தேசியவாத நலன்களை உணர்ந்து உலகளாவிய நிலைக்கு ஜப்பானை உயர்த்தியவர்.

இந்த இரண்டுமே உண்மைக்கு அருகில் இருப்பதாகவே அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர். தனது பதவிக் காலத்தில் ஜப்பானின் தேசிய அடையாளத்தையும், மரபுகளையும் உயர்த்துவதற்காக தொடர்ந்து பணியாற்றிய அபே, தொழிலாளர் ஜனநாயக கட்சியின் வெற்றி முகமாகத் திகழ்ந்தவர்.

அபேயின் அரசியல் பயணம் நீண்டது. அவரது தாத்தா நுபுசிகே கிஷி ஜப்பானின் பிரதமராகவும், தந்தை ஷிந்தரோ அபே வெளியுறவுத்துறை அமைச்சராகவும் இருந்தவர்கள். 1993ஆம் ஆண்டு அபே முதன் முதலாக ஜப்பான் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 2005ஆம் ஆண்டு அமைச்சரானார். 2006ஆம் ஆண்டு ஜப்பான் பிரதமர் ஆனார். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் பிறந்த ஒருவர் ஜப்பானின் பிரதமராவது அதுவே முதல் முறை.

ஷின்ஸோ அபேயின் பதவிக்காலம் குறுகிய காலமாக அமைந்தது. உடல்நலக்குறைவால் பதவியை இராஜினாமா செய்தார். அவர் மீண்டும் 2012ஆம் ஆண்டு ஜப்பான் பிரதமரானார். தொடர்ந்து எட்டு ஆண்டுகள் பிரதமராக இருந்த அபே 2020ஆம் ஆண்டு பதவியில் இருந்து விலகினார். அபேயின் அரசியல் செல்வாக்கு ஏற்ற இறக்கங்கள் நிறைந்தது. ஆனால், தொழிலாளர் ஜனநாயக கட்சியைப் பொறுத்தவரை செல்வாக்கு மிக்க தலைவராகவே அவர் திகழ்ந்தார்.

ஷின்ஸோ அபே, நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவு கொள்கைகளுக்காக பாராட்டப்பட்டாலும், தொடர்ந்து விமர்சிக்கப்பட்டுக்கொண்டும் இருந்தார். அவரது தேசியவாத கருத்துகள், சீனா, தென்கொரியாவுடனான ஜப்பானின் உறவில் பதற்றத்தை ஏற்படுத்தின. ஜப்பானின் சர்ச்சைக்குரிய இடமான யசுகுனி நினைவாலயத்திற்கு அவர் அடிக்கடி பயணம் செய்தார். இது ஜப்பான் இடதுசாரிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. அதனால் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

2015ஆம் ஆண்டில் கூட்டுத் தற்காப்புக்கான உரிமையை அவர் முன்வைத்தார். ஜப்பான் நாடு, தன்னை காத்துக்கொள்ளவும், தாக்குதலுக்கு உள்ளாகும் நட்பு நாடுகளை காக்கவும் வெளிநாடுகளில் துருப்புகளை அணி திரட்ட முயன்றார். அண்டை நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி அபேயின் திட்டத்திற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது. ஜப்பான் இராணுவத்தை முறையாக அங்கீகரிப்பதற்காக அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்று அபே விரும்பினார்.

இந்தத் திட்டம்தான் தற்போதுவரை ஜப்பானின் விவாதத்துக்குரியதாகவே இருக்கிறது. அபேயின் பொருளாதாரக் கொள்கைகள் ஜப்பானின் வளர்ச்சிக்கு உதவின. 2020ஆம் ஆண்டு ஜப்பானின் பொருளாதாரம் மந்தமானபோது அபே கடுமையாக விமர்சிக்கப்பட்டார். கொரோனா பெருந்தொற்று அபேயின் புகழுக்கு களங்கத்தை ஏற்படுத்தியது. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது, ஆரோக்கியமற்ற பணி கலாசாரத்தை மாற்றுவது என பல்வேறு திட்டங்களை அபே வைத்திருந்தார். சர்வேதேச அளவில் டிரான்ஸ் – பசிபிக் கூட்டத்தில், 11 நாடுகளுக்கிடையே ஒரு பெரிய வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திய பெருமை அபேக்கு உண்டு.

2020ஆம் ஆண்டு அபே பிரதமர் பதவியை இராஜினாமா செய்தமை தொழிலாளர் ஜனநாயகக் கட்சியில் உட்கட்சிபூசலுக்கு வழிவகுத்தது. அவருக்குப் பின், மூத்த அரசியல்வாதியும், நீண்ட கால அமைச்சரவை உறுப்பினருமான யோஷிஹிட் சுகா ஜப்பான் பிரதமராகப் பதவியேற்றார். அபே பதவி விலகிய பிறகும் ஜப்பானின் உள்நாட்டு அரசியலில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்தார். ஜப்பானின் மேல்சபைக்குப் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து, தெற்கு நகரமான நாராவில் அபே பிரசாரம் மேற்கொண்டிருந்தபோதுதான், ஜப்பான் கடற்படையின் தற்காப்புப் பிரிவு முன்னாள் உறுப்பினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஜப்பானின் அரசியல் முகமாகவே அபே அறியப்பட்டார். அவரது இழப்பு ஜப்பான் அரசியலில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் அது மிகையல்ல. அபேயின் பாதுகாப்பில் குறைபாடு இருந்தது என்று ஜப்பான் பொலிஸ்துறை ஒப்புக் கொண்டிருக்கிறது. தனது 27ஆண்டு காலப்பணியில், இது போன்ற வருந்தத்தக்க துயரமான சம்பவம் இதுவரை நிகழ்ந்ததில்லை என்று பொலிஸ்துறை தலைவர் தெரிவித்திருக்கிறார். ஜப்பானின் முன்னாள் பிரதமரை ஒரு தோட்டா வீழ்த்தி விட்டது.

ஜப்பான் ஓர் ஆக்கபூர்வமான நாடு. அணுகுண்டு எந்த அளவுக்கு அழிவை ஏற்படுத்தும் என்பதை + அறிந்து அதிலிருந்து மீண்டு எழுந்த நாடு. துப்பாக்கிச்சூடு நடக்காத நாளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அதிகமாக துப்பாக்கிச்சூட்டுக் கொலைகள் நடக்கும் அமெரிக்காவின் நட்பு நாடு என்றாலும், துப்பாக்கிக் கலாசாரம் அவ்வளவாக தலையெடுக்காத நாடு ஜப்பான். இங்கு அரசியல் படுகொலைகள் மிக மிக அரிது. ஜப்பான் அரசியலில் துப்பாக்கி பேசியது இல்லை. பதவியில் இருக்கின்ற யாரும் படுகொலை செய்யப்பட்டதாக வரலாறு இல்லை. இப்போது நாட்டின் முன்னாள் பிரதமரான ஷின்ஸோ அபே பொதுமக்கள் மத்தியில் தனக்கு வெகு அருகில் இருந்த ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். எந்த ஒரு நாட்டிலும் ஜனநாயகத்திற்கு மதிப்பு இருக்க வேண்டும். அரசியல் அதிருப்திகளை வாக்குச்சீட்டின் மூலம்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். வன்முறைக்கு இடம் கொடுக்கக் கூடாது. ஜப்பான் மட்டுமின்றி உலகின் எல்லா நாடுகளும் இதனைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**– முனைவர் வைகைச்செல்வன் –**

**(நன்றி: தினமணி)**

# இன்றைய நாளில்...

- **1977 – உலகின் முதலாவது புவியிடங்காட்டி சமிக்ஞை அமெரிக்காவில் அயோவாவில் பெறப்பட்டது.**
- **1983 – மனிதத் தலையின் முதலாவது முப்பரிமாண வடிவ வரியோட்டவழிக் கணித்த குறுக்குவெட்டு வரைவி வெளியிடப்பட்டது.**
- **1996 – ஓயாத அலைகள் ஒன்று: முல்லைத்தீவில் இலங்கைக் கடற்படையின் ரணவிரு பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. ஏழு கடற்கரும்புலிகள் இறந்தனர்.**
- **1997 – வட அயர்லாந்தில் பிரித்தானிய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர 25 ஆண்டுகள் ஆயுதப் போரில் ஈடுபட்டு வந்த ஐரியக் குடியரசுப் படை போர்நிறுத்தத்தை அறிவித்தது.**

# நக்கல் நமசிவாயம்



# இந்தியாவினால் வழங்கப்பட்ட உரத்தை பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தலாம்

## இரசாயன ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய உரச் செயலகம் அறிவிப்பு

இந்திய அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட உரத் தொகையை விவசாயத்துக்கு பயன்படுத்திக்கொள்ள முடியுமென தேசிய உரச் செயலாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட உரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், 0.9 சதவீதம் பையூரெட் காணப்படுவதாக தேசிய உர செயலகம் நேற்று முன்தினம் (11) அறிவித்துள்ளது.





இந்த உர தொகை தொடர்பில் தேசிய உர செயலக காரியாலயம் இந்நாட்டு இரசாயன ஆய்வுக்கூடத்தினூடாக தர அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர், இந்த உரத் தொகை தொடர்பில் 03 சர்வதேச இரசாயன ஆய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த ஆய்வு அறிக்கைகளில் 0.65 சதவீதம் பையூரெட் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பொதுவாக இலங்கையில் பயன்படுத்தப்படும் யூரியாவில் 1 சதவீத பையூரெட் காணப்படும். இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள யூரியாவில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நெல் உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்துவதில் பிரச்சினை எதுவும் இல்லை எனவும் தேசிய உரச் செயலக காரியாலயம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு அறிவித்துள்ளது.

இந்திய கடனுதவி வேலைத்திட்டத்துக்கமைய 65 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரத் தொகையின் முதல் கட்டமாக 44 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் கடந்த 09ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்தது.

இந்த உரத்தொகை கடந்த 10ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இலங்கைக்கு கையளிக்கப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால் இந்த உரத்தொகைக்கான ஆவணங்கள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர்,

நெருக்கடி நிலைமையை சந்தித்துள்ள இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கத்தினால் யூரியா உரம் பெற்றுக்கொடுக்க எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி கோட்டா விமானப்படை தளபதிக்குரிய வீட்டிலிருப்பதாக வெளியாகும் தகவல் போலியானது

### ஊடகப்பிரிவு விளக்கம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு செரந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களில் எந்த உண்மைத் தன்மையும் இல்லை எனவும், அதனை முற்றாக மறுப்பதாகவும் விமானப்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள விமானப் படை ஊடகப்பிரிவு, அதில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு சொந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக முன்னாள் பொலிஸ் அதிகாரியான அஜித் தர்மபாலவினால் வெளியிடப்பட்ட குரல் பதிவொன்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இந்த குரல் பதிவில் குறிப்பிடப்படும் எந்தவொரு விடயமும் உண்மையில்லை.

இது விமானப்படை மற்றும் விமானப்படை தளபதிக்கு இழிவை ஏற்படுத்தும் வகையிலான செயலாகும்.

விமானப்படைக்கு எதிராக பொது மக்கள் மத்தியில் வைராக்கியத்தையும் குரோதத்தையும் ஏற்படுத்தும் சந்தர்ப்பவாத நோக்கிலான செயற்பாடு எனவும் விமானப் படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய தீ மிதிப்பு நிகழ்வு இன்று



(உடப்பு நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய மகோற்சவத்தின் தீ மிதிப்பு நிகழ்வு இன்று (13) இரவு 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிகழ்வுகள், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 18 நாட்களாக இடம்பெற்றுவரும் இவ்விழா முழுக்க முழுக்க மகா பாரதக் கதையை நினைவுபடுத்தும் ஒரு விழாவாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இரவு 8 மணியளவில் இடம்பெறும் தீமிதிப்பில் முதலில் பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் தனது அக்கினிக் கரகத்துடன் முதற்பாதத்தை வைத்து தீ மிதிப்பார். அதன் பின்னர் பக்த அடியார்கள் ஒவ்வொருவராக தீ மிதிப்பில் கலந்துகொண்டு தீ மிதிப்பார்கள். இந்நிகழ்வு சுமார் 40 நிமிடங்கள் இடம்பெறும்.

## ஆழ்கடலில் விபத்துக்குள்ளான மீனவர்கள் மூவர் மீட்பு





மஹா இராவணன் கலங்கரை விளக்கத்திலிருந்து 174 கடல் மைல்கல் தொலைவில் இலங்கைக்கு தென் கிழக்கு திசையின் ஆழ்கடல் பகுதியில் விபத்துக்குள்ளான மீன்பிடி படகில் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளான மீனவர்கள் மூவர், கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் ஒருங்கிணைந்து, பாதுகாப்பாக நேற்று முன்தினம் (11) மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 02ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் 03 மீனவர்களுடன் மீன்பிடி நடவடிக்கைக்கு வெளியேறிய IMUL – A-0301 MTR என்ற மீன்பிடிப் படகே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக மீன்பிடி மற்றும் நீர்வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு, கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தலுக்கு உடனடியாக செயற்பட்ட கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் அவர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த விபத்திலிருந்து மீட்கப்பட்ட மூவரையும் காலி துறைமுகத்துக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

## குருநாகல் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு பூட்டு

எரிபொருள் பிரச்சினையின் காரணமாக குருநாகல் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை மூடுவதற்கு அந்த வைத்தியசாலையின் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மாத்திரம் சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வைத்தியசாலையில் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்த வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தயாநந்த பண்டார கருத்து தெரிவிக்கையில்,

வைத்தியசாலையின் நடவடிக்கைகள் தற்போது வரையறுக்கப்பட்டுள்ளன. தங்கி சிகிச்சைப்பெற்று வரும் நோயாளர்களுக்கு மாத்திரமே சிகிச்சை வழங்கப்படுகிறது. எரிபொருள் பிரச்சினை பாரதூரமான சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் 90 சதவீதமான விசேட வைத்திய நிபுணர்கள் இந்த மாகாணத்தைச் சேரந்தவர்கள் அல்ல.

அநேகமானவர்கள் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவ்வாறு இல்லாவிட்டால் கொழும்பிலிருந்தும் கடமைக்காக வைத்தியர்கள் இங்கு வருகிறார்கள்.

நாங்கள் கடமைகளுக்கு பஸ் அல்லது புகையிரதத்திலேயே கடமைக்கு வருகிறோம். கடமைக்கு வந்து ஒரு வாரத்துக்கு மேலாக எங்களால் வீட்டுக்கு மீண்டும் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

நாட்டிலுள்ள நிலைமையின் காரணமாக சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி, வியாழன் அல்லது வெள்ளிக்கிழமைகளில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லாத நிலை நிலவுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி கைது!

நாட்டில் கடந்த 09ஆம் திகதி மஹரகமவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இணைந்துகொண்ட பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் (11) அதிகாலை காலிமுகத்திடல் போராட்டப் பகுதியில் வைத்தே கோட்டை பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.


இந்த அதிகாரி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவர் ஆவார். அதிகாரி பொலிஸ் சீருடையுடன் காலணிகளை அணிந்து சந்தேகத்திற்கிடமான வகையில் அங்கு தங்கியிருந்தமையினால் கைது செய்யப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவருக்கு பொலிஸார் பிணை வழங்கி விடுவிக்கப்படுவார் என்றும் அந்த உயர் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.


எனினும், பொலிஸ் தலைமையகம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## பிரதமர் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருட்டு









அலரிமாளிகையின் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு கொள்ளுபிட்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடகப் பிரிவிலிருந்த இரு மடிக்கணினிகள், ஒளிப்பதிவு கெமரா மற்றும் மேலுமொரு கெமரா என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னர் அலரிமாளிகைக்கு செல்லவில்லை என்பதுடன், பிரதமர் ஊடகப்பிரிவில் மாத்திரம் அலரிமாளிகையின் வளாகத்தில் தனியாக கட்டடமொன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 09ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரிமாளிகைக்குள் நுழைந்ததன் பின்னரே இந்த உபகரணங்கள் காணாமல்போயுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையின் சுவர், கதவு என்பவற்றை உடைத்து, அங்கிருந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.







கடந்த 9ஆம் திகதிய மக்கள் எழுச்சிப் போராட்டத்தினால் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், ஜனாதிபதியின் அலுவலகம் மற்றும் பிரதமரின் அலரிமாளிகை என்பன மக்கள் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. அந்த வகையில் நேற்றும் (12) அலரிமாளிகையை மக்கள் பார்வையிடுவதற்காக வந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. இதேவேளை இளைஞர்கள் உணவு சமைப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## 12.07.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 127 15 8 | 138 6 01 |
| கனேடியன் டொலர் | 161 76 3 | 174 251 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0703 | 44 1514 |
| யூரோ | 245 0234 | 26 6 46 |
| ஜப்பான் யென் | 1 477 | 1 5861 |
| சிங்கப்பூர் டொலர் | 141 3602 | 152 381 |
| ஸ்ரேலிங் பவுன் | 311 414 | 328 818 |
| சுவிஸ் பிரான்ங் | 250 3843 | 266 4343 |
| ஐ.அ.டொலர் | 245 8447 | 257 2 00 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 1580 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 3810 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 3 18 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1732 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0276 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1451 |

# ஈழத்தமிழர்களுக்காக சுதந்திரமான பொது வாக்கெடுப்பிற்கு வழிகோலுக!

## ஐக்கிய அமெரிக்க இராஜதந்திரிகளிடம் சிறிதரன் எம்.பி. கோரிக்கை







கடந்த 2022.07.12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வொஷிங்ரன், டி.சி. – ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் மற்றும் அரச சட்டசபை உறுப்பினர்களையும் மாநிலத் திணைக்கள அதிகாரிகளையும் வொஷிங்ரன், டி.சியில் சந்தித்துக் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார சூழல்பற்றி விளக்கமளித்ததோடு, தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு சுதந்திரமான பொது வாக்கெடுப்பு ஒன்றே பொருத்தமானது என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதேவேளை, பல்லாயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கு வழிவகுத்த 30 ஆண்டுகால இனவிடுதலைப் போர் மௌனிக்கப்பட்டு 12 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில், அப்போருக்கான அடித்தளமாக இருந்த ஈழத்தமிழ் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அமெரிக்காவின் தலைமைத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். காலங்காலமாக இலங்கை அரசியல் அதிகாரப்பீடங்களுக்கு வந்த அனைத்து சிங்களத் தலைமைத்துவங்களும் தமது அரசியல் கட்சிகள் எவையாயினும், எப்போதுமே தமிழர்களுக்கெதிராகவே செயற்பட்டிருந்ததோடு அவர்களில் ஒரு சிங்களத் தலைவரேனும் தமிழர்களுக்கு முழு உரிமைகளையும் வழங்க முன்வந்திருக்கவில்லை. அதனடிப்படையில் இலங்கையின் தற்போதைய வளர்ச்சி நிலையில், அப்பிராந்தியத்திற்கு அமைதியையும் திடத்தன்மையையும் கொண்டுவரக்கூடியதொரு பொதுவாக்கெடுப்பினை ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் நடத்துவதன் மூலம், தமிழர்கள் ஒரு பூர்வீக தேசிய இனத்தவர்கள் என்ற அங்கீகாரத்தோடு, வடக்கு, கிழக்குப் பிராந்தியங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகம் என்ற அடிப்படையில் ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதற்கு காத்திரமான பங்களிப்பை வழங்குமாறு அமெரிக்காவிடம் அவர் கேட்டுக்கொண்டார். குறித்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்காக குரல்கொடுத்துவரும் அமெரிக்காவிலுள்ள புலம்பெயர் தமிழர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கலந்துரையாடலின்போது, ஈழத்தமிழர்களின் நலன்கருதி, அமெரிக்க அரசு கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்வைத்துள்ளார்:

1. 1948இற்கு முன்பிருந்தே இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் ஈழத்தமிழ் மக்களுக்காகவும் அவர்களது வழித்தோன்றல்களுக்காகவும், தமது தாய்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட புலம்பெயர்வாழ் ஈழத் தமிழர்களிடையே ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் தமது சுதந்திரத்தினைத் தீர்மானிப்பதற்காக சர்வதேச சமூகத்தினால் கண்காணிக்கப்படும் சுதந்திரமான பொது வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது.

2. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிறுத்தி இனப்படுகொலை, மனிதகுலத்திற்கெதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், பகைமை மற்றும் பிரிவினைவாதக் குற்றங்களுக்கெதிராக விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு, இனப்படுகொலைக் குற்றத்தடுப்பு மற்றும் தண்டனைக்கான தீர்மானத்தின் கீழும் சித்திரவதைக்கெதிரான தீர்மானத்தின் கீழும் பகைமை மற்றும் பிரிவினைவாதக் குற்றங்களின் கீழும் சர்வதேச நீதிக்கான நீதிமன்றத்தின் முன்னால் இலங்கையை நிறுத்தி அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது.

3. இப்பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் வரையில் நாட்டின் வடக்கு, கிழக்குப் பிராந்தியத்திலுள்ள ஈழத்தமிழர்களை ஆட்சிசெய்யவும் அவர்களையும் அவர்களது நிலங்களையும் பாதுகாப்பதற்குமாக ஓர் இடைக்கால சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது.

4. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பாரிஸ் கிளப், ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கை பொருளாதார உதவியைக் கோரும் வேளையில், நிபந்தனைகளற்று எந்தவொரு உதவியும் வழங்கப்படக்கூடாதென தமிழர்கள் வலியுறுத்துகின்றனர். ஐ.நா. மற்றும் UNHRC உள்ளிட்ட சர்வதேச சமூகத்திற்கான இலங்கையின் முதன்மையான பொறுப்புகளையும் இலங்கையின் ஏமாற்று வடிவங்களையும் சர்வதேச சமூகமானது விளங்கிக்கொள்ள வேண்டும். இலங்கைக்கான உதவிகள் எவையேனும் வழங்கப்படும்போது பின்வரும் நிபந்தனைகளை விதிக்கப்பட வேண்டும்:

அ) இலங்கையானது நிறைவேற்றப்படாத அனைத்து UNHRC தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

ஆ) மீண்டும் இடம்பெறாதென்ற உத்தரவாதமாக இலங்கை, ரோமானிய சட்டத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு இன விடுதலைப்போரின்போது தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் குற்றங்களுக்குமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படுவதற்கும் சம்மதிக்கவேண்டும்.

இ) தமிழர் பிராந்தியத்திலிருந்து இலங்கை இராணுவத்தினை அகற்றுதல் மற்றும் போருக்கு முன்னர் 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த இலங்கை இராணுவத்தின் அளவிற்கு இராணுவப் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது.

ஈ) இடைக்கால சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையினையும் ஈழத்தமிழர்களுக்காக சுதந்திரமான பொதுவாக்கெடுப்பினையும் ஏற்றுக்கொள்வது.

என்பவை உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் மேற்படி கலந்துரையாடலின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் அமெரிக்க இராஜதந்திர குழுவினருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






74 வருட கால சாபத்திற்கு விடை தருமாறு கோரியும் கோட்டா – ரணில் பதவி விலக வேண்டுமெனக் கோரியும் கினிகத்தேனை பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக போராட்ட கம ஒன்று அமைக்கப்பட்டு கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (கினிகத்தேனை நிருபர்)

## வளர்ப்போம் - எழுவோம் வேலைத்திட்டத்தின்கீழ் மத்திய மாகாணத்தில் விதைகள் வழங்கிவைப்பு

(கண்டி நிருபர்)

வளர்ப்போம் - எழுவோம் என்ற வேலைத்திட்டத்தின்கீழ் மத்திய மாகாணத்தில் வித்துகள் மற்றும் நாற்றுகள் பரிமாற்றம் செய்ய புதிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதாக மத்திய மாகாண விவசாய அமைச்சின் செய்லாளர் பசன் ரத்நாயக்கா தெரிவித்தார்.

கண்டியில் வைத்து அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

மத்திய மாகாணத்தில் உபரிமிதமான வித்துகளும் நாற்றுகளும் காணப்படுவதால் அவற்றை பணத்துக்கன்றி வித்துகளுக்கு வித்துகளாக அல்லது நாற்றுகளுக்கு நாற்றுகளாக பரிமாறும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



அதற்கான பிரத்தியேக தகவல் பரிமாற்றுத் தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, தேவையானவர்கள் அத்தளத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்று பரிமாற்றம் செய்துகொள்ள முடியும். அப்படியானவர்கள் ஒரு குழுவாக இயங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது – என்றார்.

## இடைக்கால ஜனாதிபதி தெரிவின்போது...

# கட்சிகள் வைக்கும் கோரிக்கைகளில் மலையக மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்களை உள்வாங்க வேண்டும்

(சுரேஷ் ராஜரத்தினம்)

மலையக மக்கள் இன்னும் தேசிய அரசாங்கத்தின் தேசிய நீரோட்டத்தில் முழுமையாக உள்வாங்கப்படவில்லை. அரசியல் உரிமைகள் ரீதியாகவும் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகள் ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டு, பாரிய பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெருந்தோட்ட மக்களுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க தேசிய அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும்.

நமது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிமிக்க சந்தர்ப்பத்திலும் அதிகளவு வருமானத்தைத் தேடித்தரும் தேயிலை, இறப்பர், தெங்குத் தொழில்துறைகளில் தொழில் புரியும் தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

2020ஆம் ஆண்டு முழு உலகத்தையும் கொரோனா தொற்று வாட்டிய காலத்தில் அதிகமான தொழில்துறைகள் மூடப்பட்டிருந்த போதும், நாட்டில் பெருந்தோட்டத் தொழில்துறை மட்டும் இயங்கியது. ஏனைய அனைத்துத் துறை சார்ந்தவர்களும் நிவாரணம் பெற்றுக்கொள்ள காத்திருந்தபோதும் பெருந்தோட்டத்துறை மக்கள் உழைத்துக்கொண்டிருந்தனர்.

இன்றும் அந்நிய செலாவணிகளை அதிக அளவில் தேடும் தொழில்துறையாக பெருந்தோட்டத்துறை காணப்படுகின்றது. ஆனால், பெருந்தோட்ட நிறுவனங்களும் கம்பெனிகளும் தொழில்துறை நஷ்டத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றதென தொடர்ந்து மக்களை ஏமாற்றி வருகின்றன.

அதேபோன்று போலியான வாக்குறுதிகளை வழங்கி மலையக மக்களையும் ஒவ்வொரு முறையும் அரசியல் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றனர். ஒவ்வொரு தேர்தலிலும் மலையக அரசியல் கட்சிகளும் தேசிய கட்சிகளும் ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் தண்ணீரில் எழுதப்படும் தேர்தல் வாக்குறுதிகளை வாரி வழங்குகின்றனர். மாற்றத்தினை எதிர்பார்த்து நிற்கும் மக்களும் இந்தப் போலியான வாக்குறுதிகளால், ஏமாந்து இன்றும் மலையக மக்களில் 95 சதவீதமானவர்கள் சொந்த காணிகளின்றி, சொந்த வீடுகளின்றி, சொந்த முகவரிகளின்றி பெருந்தோட்ட நிர்வாக கட்டமைப்பின் கீழ் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

மலையக மக்கள் இன்னும் தேசிய அரசாங்கத்தின் தேசிய நீரோட்டத்தில் முழுமையாக உள்வாங்கப்படவில்லை. அரசியல் உரிமைகள் ரீதியாகவும் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகள் ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டு பாரிய பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தும் நலத்திட்டங்கள் மலையக மக்களை சென்றடைவது குறைவாகவே காணப்படுகின்றது.

அந்த நலத்திட்டங்களை போராட்டங்களின் ஊடாகவே பெற்றுக்கொள்ளக்கூடிய சூழல் காணப்படுகின்றது. மலையக மக்களையும் ஒரு சமூகமாக கருதி அவர்களுக்கும் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்து, இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்கயைப்போன்று, சரி நிகராக வழிநடத்த வேண்டும்.

அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படும் இந்த காலகட்டத்தில் மலையக மக்கள் குறித்து வடக்கு, கிழக்கு, மலையகம் என்று பார்க்காமல் அரசியல் தலைவர்கள் இவர்களுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

நமது நாட்டின் அரசியல் தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக அரசியல் கட்சிகள் வைக்கும் கோரிக்கைகளில் மலையக மக்களின் உரிமைகள் சார்ந்த கோரிக்கைகளையும் உள்வாங்க வேண்டும்.









இந்திய வள்ளலார் கருணைக் குழுவின் நிதி அனுசரணையில் ஹட்டன் அசோகாஸ் சேகரனின் ஏற்பாட்டில் கொட்டகலை வீ ஆசிரியர் ஒன்றியத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 100 வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (தலவாக்கலை நிருபர்)

# அமைச்சர்களை விலைக்கு வாங்குவதை புறந்தள்ளிவிட்டு மக்களின் அபிலாஷைகளை நனவாக்க ஒத்துழைக்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பேராயர் மெல்கம் ரஞ்சித் வேண்டுகோள்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான தருணத்தில் தங்கள் அரசியல் கட்சியின் அதிகார செயற்றிட்டங்களையும், வெற்றிபெறுவதற்காக அமைச்சர்களை விலைக்கு வாங்குவது போன்ற ஊழல் நிறைந்த செயல்களையும் புறந்தள்ளி, தாய்நாட்டின் மற்றும் மக்களின் அபிலாஷைகளை நனவாக்க சகல அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். அதேபோன்று அதிகாரப் பேராசை மற்றும் ஊழலற்ற அதிக அர்ப்பணிப்புடன் கூடிய தலைமைத்துவத்தை தெரிவுசெய்ய தங்கள் மனசாட்சிக்கேற்ப அதிகபட்ச பங்களிப்பை வழங்க வேண்டுமென கொழும்பு உயர் மறைமாட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அனைத்து நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஒரு ஜனாதிபதி, ஆட்சியில் இருக்கும்போதே, தனது அதிகாரத்தை துறந்து செல்ல நேரிட்டமை, இதுவரை வரலாற்றில் நாம் கேள்விப்பட்டிராத ஓர் அரிதான சந்தர்ப்பமாகும். இவ்வாறானதொரு தாய்நாட்டின் எதிர்காலம் குறித்து எடுக்கப்படவுள்ள மிகத் தீர்க்கமான தீர்மானங்கள் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான நாட்டுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப முன்னெடுக்கப்படும் என்று முழு நாட்டுமக்களும், சர்வதேச சமூகமும் இலங்கை நாடாளுமன்றத்தை உற்றுநோக்கியிருக்கின்றன.

எல்லாவிதத்திலும் ஏழ்மை நிலைக்கும், ஒன்றுமில்லா வெறுமை நிலைக்கும் தள்ளப்படும் வரை, அளவற்ற துன்பங்களை பொறுமையாக நீண்டகாலமாக சகித்து வாழ்ந்த மக்கள், அண்மையில் அலையாக ஒன்றுதிரண்டு எல்லாப் பகுதிகளிலும் வீதியில் இறங்கி அஹிம்சை வழியிலும் மிகுந்த ஆர்வத்துடனும் தலைநகருக்கு வந்தடைந்தவர்கள், இந்த பாவம் நிறைந்த அதிகாரம் நீக்கப்பட்டு மக்களுக்கு ஆறுதலைப் பெற்றுத்தருமாறு அரசிடம் கேட்டு நின்றனர்.

அதிர்ஷ்டவசமாக இரத்தம் சிந்தப்படாமல் நிறைவேற்றப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகள் மத்தியில், நாம் தற்போது என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பது மிகத் தெளிவாகத் தெரியும். முக்கியமான இந்நேரத்தில், நாட்டின் ஒட்டுமொத்த பொதுக் கருத்துக்கும் முற்றிலும் முரணான ஒரு முடிவை நாட்டின் அதி உன்னத அமைப்பான நாடாளுமன்றத்தில் மக்களின் பிரதிநிதிகளால் எடுக்கப்படுமா என்றதொரு பேரச்சம் தோன்றியுள்ளது.

அனைத்து வழிகளிலும் துன்புற்று சோர்வடைந்திருக்கும் மக்களின் ஒரே பலமாக எஞ்சியிருக்கும் மன உறுதியை முன்வைத்து, தங்கள் உயிரைப் பொருட்டாக எண்ணாது நிதானத்துடனும், அஹிம்சை வழியிலும் போராடி வெற்றிபெற்று மக்கள், ஆட்சியமைப்பில் மகத்தான நல்லதொரு மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி அதிகாரத்தை தன் கரத்தில் வைத்திருந்தாலும் அதை தக்கவைக்க இயலாமல் அதிகாரத்தையும் நாட்டையும் விட்டு வெளியேற நேரிட்ட முன்னாள் ஜனாதிபதி எதிர்கொண்ட அனுபவத்தையும் அவருக்குக் கிடைத்த அவதூறுகளையும் பார்த்தால், அதிகாரத்திற்கு பேராசை கொள்வார்களா? நம் நாட்டில் ஜனாதிபதியாக பதவி வகித்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்பு எமது நாட்டில் அநேக ஜனாதிபதிகளுக்கு நடந்தது என்னவென்றால், அவர்கள் ஜனாதிபதியாவதற்கு முன் அவர்களுக்கு இருந்த புகழையும் நற்பெயரையும் இழந்தது மட்டுமன்றி, நாட்டு மக்களின் முன்னிலையில் அவமானப்பட்டார்கள் அல்லவா?

எனவே, குறுகிய காலத்திற்குக் கிடைக்கும் அரசியல் அதிகாரத்தைவிட, ஒருவரின் சுயமரியாதையும், நாட்டு மக்களின் விருப்பைப் பெறுவதும் மிக முக்கியமானதொன்றல்லவா?



இந்தியாவின் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தி உலகம் முழுவதும் மதிக்கப்படுவதன் காரணம், அவர் தன்னைப்பற்றி நினைத்ததைவிட பாரத நாட்டைப்பற்றி அதிகம் நினைத்ததால் அல்லவா? அவர் தன்னைப்பற்றிச் சிந்தித்திருந்தால், பாரதத்தின் முதல் பிரதமராகும் வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை நிராகரித்துவிட்டு, அவருக்குப் பதிலாக, மக்களின் விருப்பைப் பெற்ற வேறு ஒருவரை நியமித்து, பதவியிலிருந்து விலகி போய் இருப்பாரா ?

எப்போதும் இல்லாதவாறு இன்று, எமது நாடு விழிப்படைந்து மக்களின் மனஉறுதி உயர்ந்திருப்பது, அதிகாரத்தை விரும்பும் ஒரு தலைவர் பதவிக்கு வருவதால் அல்ல. மாறாக, தனது அதிகாரத்தை மனமுவந்து விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கும் ஒரு உன்னதமான மக்களின் மைந்தன் முன் வருவதினாலேயேயாகும். 74 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் நாம் தற்போது நகர்ந்து கொண்டிருப்பது அரசியல் அதிகாரத்தைப் பிடித்து வைத்திருப்பதாலல்ல. மாறாக, சுயவிருப்பத்துடன் அதை விட்டுக்கொடுக்க இயலுமானால் நாட்டுக்கு உன்னதமான சேவையைச் செய்ய முடியும்.

எனவே, இந்த இக்கட்டான தருணத்தில் மக்களின் பிரதிநிதிகள் என்றவகையில் மக்களால் உங்களுக்குக் கிடைத்துள்ள பதவியை வைத்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? மக்களிடம் இருந்து கிடைத்த வெற்றியை மிகவும் பயனுள்ள இடத்தில் மக்களிடம் திருப்பி அளிப்பீர்களா? அல்லது பலாத்காரமாக வைத்திருக்க திட்டமிட்டுள்ளீர்களா? அவ்வாறாயின் உன்னதமான மக்களின் மைந்தராக நாட்டைக் கட்டியெழுப்பும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த திட்டத்திற்கு கரம் கொடுப்பீர்களா? அல்லது முன்பு ஆட்சியில் இருந்தவர்களைபோல் அதிகாரப் பேராசை பிடித்தவர் என்று முத்திரை இடப்போகின்றீர்களா? இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை மேற்கொள்ள இன்னும் உங்களால் இயலும்.

எல்லையற்ற அதிகாரத்தை தன்னகத்தே கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதியையும் 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த மக்கள் முன்னணி அரசாங்கத்தையும் மக்கள் அதிகாரத்திலிருந்து தூக்கி எறிந்ததன் காரணம், இன்று எமது நாடு எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கும் அதன் விளைவாக மக்கள் முகங்கொடுக்கும் கடுமையான துன்பங்களுக்கும் முழுபொறுப்பு கூறவேண்டிய முன்னாள் ஜனாதிபதியும் அரசாங்கமும் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டதினாலேயேயாகும். நாடு பொருளாதார ரீதியாக ஒன்றுமில்லா வெறுமை நிலைக்கும் சர்வதேச சமூகத்தின் முன் அப்பெயரை பெற்றமைக்கும் முக்கிய காரணிகள் பல உள்ளன. அவற்றில் முன்னாள் ஜனாதிபதி மற்றும் அந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தொலைநோக்கற்ற மற்றும் தன்னிச்சையான முடிவுகள், பரவலான ஊழல் மற்றும் மோசடிகள், சட்டத்தை அரசியல் ஆதிக்கத்திற்கு அடிபணியச் செய்தல் மற்றும் மிகவும் ஊழல் நிறைந்த அரசியல் கலாசாரம் ஆகியவையாகும்.

காலிமுகத்திடலை முன்னிலைப்படுத்தி இலட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி வந்து போராடியது மேற்கூறிய ஊழல் நிறைந்த அரசியல் கலாசாரத்திலும் அதன் அமைப்பு முறைமையிலும் ஒரு முழுமையான மாற்றத்தை (ளுலளவநஅ ஊhயபெந) எதிர்பார்ப்பதனாலேயாகும். அதற்காக மக்கள் இத்தருணத்தில் தங்களால் இயன்றதை மிகவும் அர்ப்பணிப்புடன் செய்துள்ளனர். ஜனநாயகத்தை மதிக்கும் மக்களாக அவர்கள் தற்போது நாட்டின் அரசியலமைப்பின்படி இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அதன் பொறுப்பை நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தங்களின் பிரதிநிதிகளாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒப்படைத்துள்ளனர்.

மக்கள் மிகவும் துன்பகரமான நிலைக்குத் தள்ளப்பட்டு நாடு பாரிய பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கும் இத்தகைய இக்கட்டான தருணத்தில் அனைவரும் ஒன்றிணைந்து பொது ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் பிரதமரை தெரிவுசெய்ய முடியாமல் இருப்பதிலிருந்து வெளிப்படுவது என்னவென்றால், பொதுமக்களின் அபிலாஷைகளை இன்னும் மக்களின் பிரதிநிதிகள் முறையாக புரிந்துகொள்ளவில்லை என்பதேயாகும்.

நாட்டின் ஒரு சமயத் தலைவர் என்றவகையில் இந்த நாட்டின் பொதுமக்கள் சார்பாக நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஜனநாயக செயல் திட்டமாக இத்தருணத்தில் நாட்டின் சமயத் தலைவர்கள், மக்கள் சார்பாக முன்வைத்துள்ள, அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தற்காலிக அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு அச்சமின்றியும், கட்சி சார்பற்ற வகையில் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இக்கட்டான தருணத்தில் தங்கள் அரசியல் கட்சியின் அதிகார செயற்றிட்டங்களையும் அவற்றில் வெற்றிபெறுவதற்காக அமைச்சர்களை விலைக்கு வாங்குவதுபோன்ற ஊழல் நிறைந்த செயல்களை புறந்தள்ளி, தாய்நாட்டின் மற்றும் மக்களின் அபிலாஷைகளை நனவாக்க அதிகாரப் பேராசை மற்றும் ஊழலற்ற அதிக அர்ப்பணிப்புடன்கூடிய தலைமைத்துவத்தை தெரிவுசெய்ய - தங்கள் மனசாட்சிக்கேற்ப அதிகபட்ச பங்களிப்பை வழங்க உங்களுக்கு கிடைத்துள்ள இந்த அதிர்ஷ்டமான வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை கைவிட வேண்டாம் என்று நான் மிகவும் தாழ்மையுடனும் ஆவலோடும் கேட்டுக்கொள்கிறேன் - என்று தெரிவித்துள்ளார்.

## துளிச் செய்திகள்

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹகம பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நபர் ஒருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். தனது முச்சக்கரவண்டிக்கு பெற்றோல் பெற்றுக்கொள்வதற்காக சென்றவேளை அடையாளந்தெரியாத நபர்களால் கூரிய ஆயுதத்தால் அவர் தாக்கப்பட்டுள்ளார்.

ஹீனட்டிய பகுதியைச் சேர்ந்த 38 வயதான நபரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதுடன், சந்தேக நபர்களைத் தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

★★★★★

ஹிக்கடுவ கடலில் குளித்துக்கொண்டிருந்த ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இருவர் கடலில் மூழ்கிய நிலையில், கடற்கரை பாதுகாப்புப் படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தொரிவித்தனர்.

★★★★★

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவலோக்க சுற்றுவட்டத்துக்கருகில் பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது 12 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 33 வயதான நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★

பொரளை, கோட்டே வீதி ரயில் நிலையத்துக்கு அருகில் 05 கிராம் 855 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 24 வயதான நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

★★★★★

பேலியகொடை, பிலிபிட்டிய பகுதியில் 05 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த 53 வயதான நபர் ஒருவரை நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலிமங்கட பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 44 வயதான நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்துள்ளார். எருமைகளை மேய்க்கச் சென்றபோது மூவர் மீது யானை தாக்கியுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★

அலதெனியவில் மோட்டாசைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதில் மீது மோதியதில் 17 வயதான இளைஞர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். மோட்டார்சைக்கிளில் பயணித்த மற்றுமொருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் தித்தபஜ்ஜல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# சைக்கிள்கள் உள்ளிட்ட ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்களை திருடிய நபர் பொலிஸாரினால் கைது

*(ஜூட் சமந்த)*

சைக்கிள்கள் உள்ளிட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்களை திருடியதாக தெரிவிக்கப்படும் சந்தேகநபரொருவர் புத்தளம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகள்



மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தேகநபரினால் திருடப்பட்ட 09 சைக்கிள்கள், தொலைக்காட்சி, வானொலி, குழந்தைகளின் எடையை நிறக்க பயன்படுத்தும் உபகரணம், கால் பாதத்தை மசாஜ் செய்யும் இயந்திரம், கட்டில் மெத்தை உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரினால் திருடப்பட்ட சைக்கிள்கள் 25 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபரை புத்தளம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



**நெருக்கடியான இக்கால கட்டத்தில் மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள முடியாத நேரத்தில் அவர்கள் போக்குவரத்தில் இப்படியும் பிரயாணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புத்தளம் - கற்பிட்டி பிரதான வீதியில் மக்கள் பஸ்ஸில் பயணம் செய்தபோது... (படங்கள் - உடப்பு நிருபர்)**

# தினகரன் - வாரமஞ்சரி இணையாசிரியர் மர்லின் தேசத்தின் மாமணி விருது வழங்கி கௌரவிப்பு

அகில இந்திய தேசிய காங்கிரஸின் முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதலமைச்சரும், தென்னாட்டு காந்தி என அழைக்கப்பட்டவருமான மறைந்த கே. காமராஜரின் 119ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விருது வழங்கும் திட்டத்தின்கீழ் இலங்கை தினகரன் - வாரமஞ்சரி இணையாசிரியர் மர்லின் மரிக்கார் தேசத்தின் மாமணி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இந்நிகழ்வு கடந்த வாரம் 15ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் திண்டுக்கல் பசுமைவாசல் பவுண்டேசன், குமரி மாவட்டத்தின் தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்டத்தின் காமராஜர் இளைஞர் வளர்ச்சிப் பேரவை, சேலம் மாவட்டத்தின் ஸ்ரீ சக்சஸ் அகாடமி அன்ட் பவுண்டேசன் ஆகிய அமைப்புகள் இணைந்து சமூக மேம்பாட்டுக்காக பங்களித்துவரும் பல்துறைச் சாதனையாளர்களுக்கு இணையவழி



ஊடாக விருது வழங்கி கௌரவிக்கும் திட்டத்தின் கீழேயே சிரேஷ்ட ஊடகவியலாளர் மர்லின் மரிக்காருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜரின் மாமணி விருதுகள் - 2022 என்ற தொனிப்பொருளின்கீழ் நடத்தப்பட்ட இவ்விருது வழங்குதலில் தேசத்தின் மாமணி விருது பெற்றுக்கொண்ட ஒரே இலங்கை பத்திரிகையாளர் மர்லின் மரிக்கார் ஆவார். இவ்விருதை மொத்தம் ஏழு பத்திரிகையாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள%போதிலும், ஏனைய அனைவரும் தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர் என்று ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விருது வழங்கும் திட்டத்தின்கீழ் ஆசிரியர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், சமூகசேவகர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், இளம் படைப்பாளர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகிய 09 பிரிவுகளைச் சார்ந்த சாதனையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, வெவ்வேறு பெயர்கொண்ட விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். இந்த விருதுகளுக்கென 1,112 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

பத்திரிகைத்துறை ஊடாக சமூக மேம்பாட்டுக்காக அளித்துவரும் பங்களிப்பில் பெற்றுக்கொண்டுள்ள சாதனைகள் மற்றும் கௌரவிப்புகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு ஊடகவியலாளர் மர்லின் மரிக்கார் இவ்விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திகதி 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4819
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,358,060.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 5 4 2 0 5 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,602,844.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3061
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,507,040.00
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 05 14 21 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,325,150.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1297
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,946,140.00
வெற்றி இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 7 6 3 4 5 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,306,487.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 849
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,277,340.00
வெற்றி இலக்கினம் Q வெற்றி இலக்கங்கள் 07 14 43 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,239,051.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 128
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,541,620.00
இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 01 26 28 51
விசேட இலக்கினம் கடகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,165,707.80

26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1167
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,564,320.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 261,145,690.00
M 23 24 29 38 62
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 37, தேவானம் N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக கிராம சேவையாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்



(பொத்துவில் மேலதிக நிருபர்)

பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக பொத்துவில் கிராம சேவையாளர்கள் சங்கம் நேற்று (18) கண்டனப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

எரிபொருள் நிலையங்களில் கிராம சேவை உத்தியோகத்தர்களை புறக்கணித்து செயற்படுவதுடன், கடந்த சனிக்கிழமை பொத்துவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசைகளில் காத்திருந்த கிராம சேவையாளர் ஒருவரை தள்ளிவிட்டமை, அரச சேவை என்ற அடிப்படையில் பொலிஸார் மட்டும் வரிசையில் காத்திருக்காமல் சென்று எரிபொருளை பெற்றுக்கொள்வதும் அவர்களது உறவினர்களது வாகனங்களையும் கொண்டுவந்து முன்னுரிமைப்படுத்தி எரிபொருளைப் பெற்றுக்கொள்வது, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் கொள்கலன்களில் அதிகளவான எரிபொருட்களை கொள்வனவு செய்து கறுப்புச் சந்தைக்கு வழிவகுப்பதைக் கண்டித்தே இக்கண்டனப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் பொலிஸாரின் உறவினர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு விசேட ஏற்பாடுகள் உண்டா? கிராம சேவையாளர்கள் உட்பட அரச ஊழியர்களை பெற்றோல் விநியோகத்தின்போது கண்டுகொள்ளாத, அவமதித்த எரிபொருள் நிலைய உரிமையாளரை வன்மையாகக் கண்டிக்கிறோம், முழுநேர கடமைக்கான உத்தியோகத்தர்கள் கிராம உத்தியோகத்தர்களே, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தடையின்றி எரிபொருள் பெற முடியுமாகவிருந்தால் 24 மணிநேரமும் கடமை புரியும் கிராம உத்தியோகத்தர்களுக்கு பெற முடியாதா? கிராம உத்தியோகத்தர் சேவை அத்தியாவசிய சேவையா, அநாவசிய சேவையா? நாங்களும் சமாதான உத்தியோகத்தர்களே, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸாரின் அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம், பொலிஸார் பாதுகாப்புக் கடமைக்கா, பெற்றோல் விநியோகத்திற்கா, பொலிஸ் அராஜகம் ஒழிக போன்ற சுலோகங்களை ஏந்தியவண்ணம் தங்களது எதிர்ப்பினைக் காட்டினர்.

ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகைதந்த பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில் பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டபிள்யூ.என். தேசப்பிரிய கருத்துகளை கேட்டறிந்து கொண்டதுடன், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்பதுடன், அரச சேவையில் உள்ளோருக்கு முறைப்படி எரிபொருளினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், பொலிஸார் முறைகேடாக நடந்துகொண்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, உதவிப் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயிலிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டதுடன், இக்கண்டனப் போராட்டத்தில் சட்டத்தரணி எஸ்.ஏ.அகமட் முனாசுடீன், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.அப்துல் மஜீத், வேறு அரச சேவை உத்தியோகத்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

# மட்டு. மாவட்ட புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக சுகதபாலஸ்ரீ பொறுப்பேற்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்ட புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக ஜே.பி.ரி.சுகதபாலஸ்ரீ நேற்று முன்தினம் (17) கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிவந்த சுகத் மாசிங்க, காலி மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து, இந்த வெற்றிடத்துக்கு அநுராதபுர மாவட்டத்தில் கடமையாற்றிவந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக ஜே.பி.ரி.சுகதபாலஸ்ரீ பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் சம்பிரதாயபூர்வமாக மதகுருமார் ஆசியுடன், தமது கடமைகளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கடமைகளைப் பெறுப்பேற்றுள்ளார்.

# வருமானம் குறைந்த மக்களுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கிவைப்பு



(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினால் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் முகமாக அக்கரைப்பற்றில் வாழும் வருமானம் குறைந்த மக்களுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளரின் வழிநடத்தலில் அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

இதன்போது சமுர்த்தி முகாமையாளர், திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் குறித்த சில பிரிவுகளில் வாழும் மக்களுக்கு அரிய இன கருங்கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. இதில் தக்வா ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினர், திட்ட உதவியாளர் எம்.ஏ.முஹாஜிர் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு இமைகள் அமைப்பு போரதீவுப்பற்று பாடசாலைகளுக்கு வினாப்பொதிகள் வழங்கிவைப்பு!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு இமைகள் அமைப்பின் அனுசரணையில் பட்டிருப்பு கல்வி வலயத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்தில் 2022ஆம் ஆண்டு தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கும் நோக்கில் தரம்-5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சைக்கான வினாப்பொதிகள் நேற்று (18) வழங்கப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகியின் பங்குபற்றுதலுடன், பட்டிருப்பு கல்வி வலயத்தின் பொறியியலாளரும், மட்டக்களப்பு இமைகள் அமைப்பின் உறுப்பினருமான எந்திரி. செ.சுபாஹரன், பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த.இராஜசேகர், வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் திருமதி எஸ்.சிவகுமார் ஆகியோரிடம் கையளித்தார்.

இப்பொதிகள் மாணவர்களைச் சென்றடைவதற்காக பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாசா, போரதீவுப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராசாவிடமும், பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பு.திவிதரன் உதவிக் கல்விப் பணிப்பாளர் பா.வரதராஜனிடமும் கையளித்தனர்.

# 2023ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்கள் கோரல்

(சீனக்குடா நிருபர்)

ஒரு கல்வி வலயத்திலிருந்து இன்னுமொரு கல்வி வலயத்துக்கு தங்களது சுயவிருப்பின்பேரில் இடமாற்றம் பெற விரும்பும் கிழக்கு ஆசிரியர்களிடமிருந்து 2023ஆம் ஆண்டுக்கான இடமாற்ற விண்ணப்பங்களை கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

இது தொடர்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள சகல வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும் மாகாணத் திணைக்களத்தால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்துக்கு தமது வலயத்துக்கென வலய இடமாற்ற அதிகாரிகளினால் தீர்மானிக்கப்படுகின்ற உச்சபட்ச சேவை காலத்தினை விஞ்சி சேவை புரிகின்ற ஆசிரியர்கள், மேலும் முதல் நியமன வலய நியமன கடிதத்தின்படி கட்டாய சேவைக் காலத்தினை பூர்த்திசெய்த ஆசிரியர்கள், அத்துடன், நியமனக் கடிதத்தில் கட்டாய சேவை காலம் குறிப்பிடப்பட்டிருக்காவிட்டால், முதல் நியமன திகதியிலிருந்து 5 வருட சேவைக் காலத்தினை பூர்த்திசெய்த ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து மேற்படி இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றத்திற்கு 2022ஆம் ஆண்டு விண்ணப்பித்தோர் தவிர, ஏனையோர் விண்ணப்பிக்க முடியும். கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கைக்கு இணங்க, தங்களது வலயத்திலுள்ள சகல ஆசிரியர்கள், மற்றும் அதிபர்களுக்கு அறிவித்து அதற்கமைவாக ஆசிரியர்களால் அனுப்பப்படுகின்ற சகல இடமாற்ற விண்ணப்பங்களையும் 31.07.2022ஆம் திகதிக்கு முன்பு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, வலயத்துக்கு வெளியே இடமாற்றம் பெற விரும்புகின்ற ஆசிரியர்கள், www.ep.gov.lk/en/depteduindex எனும் இணையதளத்தில் 28.06.2022ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக விண்ணப்பங்களைப் பெற்று, சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதனை சகல வலய கல்வி அலுவலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நாவற்குடா பொதுச் சந்தையில் ஆணொருவர் சடலமாக மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடா பொதுச் சந்தை பகுதியில் ஆண் ஒருவர் சடலமாக நேற்று (18) காலையில் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தை கட்டடத்திற்கு சம்பவதினமான நேற்று காலையில் வியாபாரத்துக்காக வந்தவர்கள் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று மேற்கொண்ட விசாரணையில் குறித்த நபர் 60 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், இதுவரை உயிரிழந்த நபர் அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கான கிளை ஆரம்பம்

(மாளிகைக்காடு நிருபர்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கான கிளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில், கிளையின் இணைப்பாளராக ப.பிரதீபனும், செயலாளராக எம்.விக்னேஸ்வரனும் ஊழியர்களால் ஒருமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

அதேபோல் இக்கிளைக்கு நிர்வாக உறுப்பினர்களாக சுகாதாரப் பிரிவில் வி.தர்மராஜாவும், வேலை பகுதியில் எம்.ஏ.அனஸும், பாதுகாப்புப் பிரிவில் டி.பாஸ்கரனும், சாரதிகள் சார்பாக எஸ்.கேதீஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டதுடன், நிர்வாக ஆலோசகராக க.பத்மராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.





கிளை நிறுவப்பட்டதைத் தொடர்ந்து ஊழியர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். மாநகர சபை நிர்வாகத்தின் அச்சுறுத்தல்கள், எதிர்ப்புகள், கெடுபிடிகள் ஆகியவற்றுக்கு மத்தியில் கிளையை வெற்றிகரமாக ஆரம்பித்திருப்பதாக சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

# கல்முனையில் எரிவாயு விநியோகத்திற்கு விசேட நடைமுறை; திட்ட மேம்படுத்தல் தொடர்பில் மீளாய்வுக் கலந்துரையாடல்

(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர பிரதேசங்களில் எரிவாயு மற்றும் எரிபொருள் விநியோகத்தை குளறுபடிகளின்றி சீராக முன்னெடுப்பதற்காக குடும்ப அட்டை மற்றும் பாஸ் முறைமை அமுலுக்கு வந்துள்ளது. இத்திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பில் அதிகாரிகள் மட்ட ஒருங்கிணைப்பு மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று (18) கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.



கல்முனை மாநகர முதலவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் பிரதேச செயலாளர்கள், மாநகர பிரதி முதல்வர், ஆணையாளர், பொலிஸ் அதிகாரிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், எரிவாயு நிறுவனங்களின் பிராந்திய அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புகளை உள்ளடக்கிய விசேட செயலணி மேற்கொண்ட தீர்மானத்திற்கமைவாக கல்முனை மாநகர சபை மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கடந்த மாதம் 04ஆம் திகதி தொடக்கம் பல தடவைகள் இச்செயலணி மாநகர சபையில் கூடி, இப்பிரதேசங்களில் எரிவாயு, மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் டீசல் விநியோகத்தின்போது ஏற்படுகின்ற குழப்பங்களை தவிர்ப்பதற்கும் முறைகேடான செயற்பாடுகள், பதுக்கல் மற்றும் கறுப்புச்சந்தை வியாபாரத்தை முறியடிப்பதற்கும் அனைத்து மக்களுக்கும் அவை இலகுவாக கிடைப்பதற்கும் ஏற்றவகையில் விநியோக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஆலோசித்து, அதற்கான திட்டமிடல்களை மேற்கொண்டிருந்தது.

உத்தேச நடைமுறைகள் தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை மாநகர முதல்வர் தலைமையிலான குழுவொன்று இரு தடவைகள் சந்தித்து, கலந்துரையாடியிருந்ததுடன், அவரது அனுமதி, ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டிருந்தது.

இதையடுத்து கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்துக் குடும்பங்களும் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கான குடும்ப அட்டையும் அதனோடிணைந்ததாக வாகனங்களுக்கான எரிபொருள் கொள்வனவுக்காக விசேட அனுமதிப் பத்திரமும் (பாஸ்) கிராமசேவகர் ஊடாக தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதன்பிரகாரம் சில இடங்களில் எரிவாயு விநியோகம் குளறுபடியின்றி சீராக முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

அதேவேளை, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் வந்ததும் இதே அடிப்படையில் குடும்ப அட்டையின் பிரகாரம் தேவையான ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதனை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக கடற்றொழில், விவசாயம், கைத்தொழில்துறைகளுக்கும் உணவுப்பண்டங்கள் உற்பத்தியாளர்களுக்கும் தேவையானளவு மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை அந்தந்த திணைக்களங்களின் சிபார்சுகளுக்கேற்ப முறையாக விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சீரான முறையில் இயங்கும் மட்டக்களப்பு ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையம்



(மட்டக்களப்பு நிருபர்)



மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஒரேயொரு ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மிகவும் சீரான முறையில் மக்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், முன்னுரிமை அடிப்படையில் கர்ப்பிணித் தாய்மார்கள், சிறு குழந்தைகளுடன் வைத்தியசாலைக்குச் செல்வோர், மாற்றுத்திறனாளிகள், திடீர் மரண விசாரணை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், சுயதொழிலில் ஈடுபடுவோர், அவசர தேவைக்காக வைத்தியசாலைக்கு செல்வோர், விவசாயிகள், இணக்க சபை உறுப்பினர்கள், சுற்றுலாப் பிரயாணிகள், மதகுருமார், வருடாந்த உற்சவம் ஆரம்பமாகவுள்ள மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலருக்கும் முன்னுரிமை அடிப்படையில் வரிசைக்கிரமமாக மிகவும் சீரான முறையில் பெற்றோல் வழங்கப்பட்டது.

குறித்த எரிபொருள் நிலையத்தின் உரிமையாளரும் சமூகசேவையாளருமான தேசபந்து எம்.செல்வராஜா எரிபொருள் நிலையத்திலேயே நின்று மக்களை ஒழுங்குபடுத்தி சீரான முறையில் அனைவருக்கும் பெற்றோல் வழங்குவதற்கு வசதிகளை மேற்கொண்டிருந்தார்.

எரிபொருள் தட்டுப்பாடான இக்கால கட்டத்தில் சீரான முறையில் அனைவருக்கும் பெற்றோல் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்த குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் தேசபந்து எம்.செல்வராஜாவுக்கு மக்கள் இதன்போது நன்றிகளைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண ஜனாதிபதியாக ரணிலை தெரிவுசெய்வதே சிறந்தது

## தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் முகைதீன்

(கிண்ணியா நிருபர்)

நாடு பொருளாதார வீழ்ச்சி கண்டுள்ள இந்த காலகட்டத்தில், ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை தெரிவுசெய்வதே சிறந்தது - என தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் முகைதீன் தெரிவித்தார்.

திருகோணமலை முள்ளிப்பொத்தானையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (17) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட இந்த நெருக்கடி நிலைமைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி தெரிவு இடம்பெறவுள்ள நிலையில், நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களின் நன்மைக்காகவும் பல சர்வதேச நாடுகளின் தொடர்பை பேணக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்கவே. பொருளாதார வீழ்ச்சியை இல்லாதொழிக்கவும் அதனை மீளக் கட்டியெழுப்பவும் நாட்டிலுள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்புள்ளது. இதற்காக கட்சி பேதம் மறந்து, திறம்பட நாட்டுக்காக ஜனாதிபதி தெரிவின்போது ரணில் விக்ரமசிங்கவை தெரிவுசெய்ய வேண்டும். இதற்காக எமது கட்சியும் இதனையே விரும்புகின்றது.

நாட்டின் வெற்றி மக்களின் வெற்றியாகும். பொருளாதார வீழ்ச்சியை சரிசெய்ய வேண்டிய நிலை உள்ளது. எரிவாயு, எரிபொருள் என பல வரிசைகள் உள்ள நிலையில், ஒட்டுமொத்தமாக நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. இதற்கான ஜனாதிபதி தெரிவு 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதனை கருத்திற்கொண்டு அனைவரும் கட்சி பேதங்களுக்கு அப்பால் திறம்பட செயற்பட்டு, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள அனைவரும் ஒன்றிணைந்து ரணிலை ஜனாதிபதியாக்குவோம் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



ஜனாதிபதியாக ஆர தெரியிற எண்டதில சிலர் குழம்புறாங்க எலுவா?

விக்கினேஸ்வரன் எம்.பி. மட்டும் சோலி இல்லாமல் ஆரு வந்தாலும் தான் நடுநில எண்டு சொல்லித்தாரு. கூட்டமைப்புலதான் இப்ப ரணில எதிர்க்கவேண்டும் என ஒருசாரார் கொடிதூக்கிறாங்க..!

எந்த சிங்களவன் வந்தாலும் தமிழனுக்கு விமோசனம் இல்ல என்பது மட்டுமே உண்மை..

பாப்பமே என்ன கூத்து நடக்கபோகுது எண்டத..!

# வவுணதீவில் குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை

(மண்முனை நிருபர்)

வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாளம்பைக்கேணி பிரதேசத்தில் குடும்பஸ்தரொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுணதீவு, சாளம்பைக்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய அழகையா தினேஸ் என்பவரே தனக்குத்தானே கழுத்தில் சுருக்கிட்டு நேற்று முன்தினம் (17) தற்கொலை செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் திருமணம் செய்துகொண்ட குறித்த நபர், இரு தினங்களுக்கு முன்னர், உடல்நலக் குறைவினால் மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த தனது மனைவியை சென்று பார்த்துவிட்டு வீடு திரும்பியதாகவும் அன்றைய தினத்தில் வீட்டு அறையினுள் நித்திரைக்கு சென்றவர் வெளியில் வராத நிலையில், அவரின் மாமா வீட்டு கூரையினூடாக சென்று பார்த்தபோது வீட்டு அறையினுள் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் காணப்பட்டதாகவும், குறித்த நபரின் குடும்பத்தில் இதற்கு முன்னர் மூவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவர்களின் கற்றலுக்காக இடம் தந்து உதவிட திருமலை ஜமாலியா பள்ளிவாசல் முன்வருகை

(நிலாவெளி நிருபர்)

திருகோணமலை ஜமாலியா பள்ளிவாசல் நிர்வாகத்தினர் அப்பிரதேசத்தில் கற்றலுக்கான வீட்டு வசதி இல்லாத மாணவர்களுக்கு பள்ளிவாசலில் தமது சுயகற்றலை தொடர்வதற்கு இடம்தந்து உதவிட தீர்மானித்துள்ளதாக பள்ளிவாசல் பரிபாலன சபையின் செயலாளர் எம்.வை.பஹ்மி தெரிவித்தார்.

மேற்படி கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் (17) காலை 9.00 மணியளவில் தி/ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம் மண்டபத்தில் வித்தியாலய அதிபர் ஏ.ஜே.எம்.சாலி தலைமையில் நடைபெற்றது. இதில் பள்ளிவாசல் பரிபாலன சபையினர், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், அஹதியா பாடசாலை அமைப்பினர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

அங்கு உரை நிகழ்த்திய பள்ளிவாசல் பரிபாலன தலைவர் ஏ.எஸ்.மௌசூம் ஆசிரியர் இப்பிரதேசத்தில் பாடசாலை செல்லும் ஆண் மாணவர்கள் தமது வீட்டில் சுயமாக தமது படிப்பைத் தொடர வீட்டில் வசதிகளற்று காணப்படும் நிலைமையை கருத்திற்கொண்டு பள்ளிவாசலின் மேல்தளம் முழுவதையும் கற்றலுக்கான வசதிகளை ஏற்படுத்தி வழங்க தீர்மானித்துள்ளோம் என்றும் மாலை 6.00 மணிதொடக்கம் விடியற்காலைவரை பள்ளிவாசலில் தங்கி தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் பெண் மாணவியர்களுக்கும் இந்த வசதிகளை வழங்க உத்தேசித்திருப்பதாக குறிப்பிட்டார்.

பாடசாலையின் அதிபர் ஏ.ஜே.எம்.சாலி குறிப்பிடுகையில், மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் அக்கறைகொண்டு செயற்படும் மேற்படி செயற்றிட்டம் பாராட்டுக்குரியது. பாடசாலையும் மேற்படி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குமுழுஒத்துழைப்பையும் வழங்கும் என்று தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் ஸாகிருக்கு இந்தியாவின் நட்சத்திர மாமணி விருது வழங்கிவைப்பு

(பொலிவேரியன் நிருபர்)



சாய்ந்தமருதைச் சேர்ந்த ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ். எம்.ஸாகிர் நட்சத்திரமாமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட் டுள்ளார்.

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15ஆம் திகதியை முன்னிட்டு, திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் இளைஞர் வளர்ச்சிப் பேரவை, சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி & பவுண்டேஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய பல்துறை சாதனையாளர்களுக்கான 'பெருந்தலைவர் காமராஜரின் மாமணி விருதுகள் - 2022' வழங்கும் நிகழ்வில் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக இலங்கையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது எனும் ஊரைச் சேர்ந்த




ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான, முஹம்மது சதீது முஹம்மது ஸாகிர், "கலைஞனுக்காக கலையில்லை, கலைக்காகவே கலைஞன் என்று காலம் போற்றும் கலைஞர்" என்ற மகுடத்துடன் நட்சத்திர மாமணி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# வடக்கு, கிழக்கு மக்களை ஊழல்வாதிகளிடம் அடகுவைத்து பிழைப்பு நடத்தியவர்களை கண்டித்து ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன்)

வடக்கு, கிழக்கு மக்களையும் இளைய தலைமுறையினரையும் ஊழல்வாதிகளுக்குப் பின்னால் அடகுவைத்து பிழைப்பு நடத்தியவர்களை கண்டித்து மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் தமிழ் இளையோர் அமைப்பு நேற்று முன்தினம் (17) கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




தமிழ் இளையோர் அமைப்பின் தலைவர் கே.சபேஸ்வரனின் அழைப்பினையடுத்து நேற்று முன்தினம் காந்தி பூங்காவிற்கு முன்னால் சிலர் ஒன்றுகூடி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது இதில் கலந்துகொண்ட தமிழ் இளையோர் அமைப்பின் தலைவர் கே.சபேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் தேசத்தை சூறையாடும் வகையில் பலர் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். நாட்டில் ஏற்பட்டுள்ள அவலநிலையான பொருளாதார நெருக்கடிக்கு காத்திரமானவர்கள் என்ற அடிப்படையில் தென்னிலங்கை இளையோர்களால் பலர் அடையாளப் படுத்தப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டனர். அவர்களுடன் வடக்கு, கிழக்கில் இணைந்து நின்ற பலர் காணப்படுகின்றனர். எனவே, அவர்களை கேள்விக்குட்படுத்துவதுடன், கண்டனத்தை செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

ஆகவே, இந்த கண்டனப் பேரணி இவ்வாறு துண்டாட நினைப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாகவும் மேலும் மேலும் எங்களது தமிழ் சமூகத்தின் ஓர்மத்தை சிதைக்கும் வகையில் செயற்படுவார்கள் என்றால் தென்னிலங்கையில் ஒரு படிப்பினையை தந்திருக்கின்றனர். எனவே, நாங்களும் ஊழல்வாதிகளுடன் இணைந்திருந்தவர்களின் வீடுகளை முற்றுகையிட்டு, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் செய்யவேண்டி ஏற்படும் என தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்தோடு தமிழ் மக்களின் தீர்வுக்கான தமிழ் தலைமைகள் சிந்தித்துக்கொள்ளவேண்டும் எங்களுடைய மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் தீர்வு தளத்தை பலப்படுத்தவேண்டும. அத்தோடு இருக்கின்ற காலகட்டத்தில் அரசியலமைப்பின் ஊடாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ் மக்கள் எந்த தீர்வை எதிர்பார்க்கின்றார்களோ அந்தத் தீர்வுக்கு ஏற்றமாதிரி தங்களுடைய தீர்வு பயணத்தை மேற்கொள்ளவேண்டும் அல்லது அவர்களால் முடியாவிட்டால் தமிழ் பேசுகின்ற மக்கள் எந்தத் தீர்வை விரும்புகின்றார் என்ற அடிப்படையில் ஒரு வாக்கெடுப்பு நடத்த தயாராகவேண்டும்.


எனவே, இன்னும் இன்னும் ஒரே இடத்தில் கதைத்துக் கொண்டு எமது தமிழ் சமூகத்தையும் இளையோரையும் அடகுவைத்துக்கொண்டு நாங்கள் ஒரு கனவுகளை சிதைத்த சமூகமாக வாழ விரும்பவில்லை. ஆகவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற எல்லோருக்குமான ஒரு கண்டனமாக இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம் - என்றார்.

இந்த ஆர்ப்பாட்டம் காலை 10 மணிக்கு ஆரம்பித்து 11 மணிவரை இடம்பெற்றதுடன், பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

# உலக செய்திகள்

# இந்தியாவின் 15ஆவது குடியரசுத் தலைவர் யார்?





## அனல் பறக்கும் தேர்தல் களத்தில் திரௌபதி முர்மு - யஷ்வந்த் சின்ஹா

## டில்லியில் பிரதமர் மோடி - சென்னையில் முதலமைச்சர் ஸ்டாலின் வாக்களிப்பு







## 21இல் தேர்தல் முடிவுகள்

இந்தியாவின் 15ஆவது குடியரசுத் தலைவரை தெரிவுசெய்வதற்கான தேர்தல் நேற்று (ஜூலை 18) இடம்பெற்றது.

மக்களவை, மாநிலங்களவை எம்.பிக்கள் 776 பேர், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 4,120 எம்.எல்.ஏக்கள் என 4,896 பேர் குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் தகுதியை பெற்றிருந்தனர்.

இதன்படி நேற்றுக் காலைமுதல் நாடாளுமன்றம், அனைத்து மாநிலங்களின் பேரவைகளிலும் வாக்குப்பதிவுகள் விறுவிறுப்பாக நடைபெற்றன.

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரௌபதி முர்மு, எதிர்க்கட்சிகள் சார்பில் யஷ்வந்த் சின்ஹா போட்டியிடுகின்றனர். தற்போதைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் எதிர்வரும் 24ஆம் திகதி நிறைவடைகிறது.

இதனைத் தொடர்ந்தே நேற்று நாடு முழுவதும் குடியரசுத் தலைவர் தேர்தல் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் டில்லி நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் பிரதமர் நரேந்திர மோடி வாக்களித்தார். தொடர்ந்து உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட அமைச்சர்களும், எம்.பிக்களும் வாக்களித்தனர்.

கொரோனாவிலிருந்து குணமடைந்த நிலையில், சென்னை காவேரி மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆன தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நேராக தலைமைச் செயலகம் சென்று வாக்களித்தார். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் வாக்களித்தார்.

இதேபோல் உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மத்தியபிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட், ஆந்திர முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி, ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக், மகாராஷ்டிரா முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே, டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் அந்தந்த மாநிலங்களில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிகளில் வாக்களித்தனர்.

வாக்குப்பதிவுகள் மாலை 5 மணிவரை நடைபெற்றன. அதிலும் குறிப்பாக, மாலை 4 மணிமுதல் 5 மணிவரை கொரோனாவால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்கள் வாக்களிக்கின்றனர். வாக்குப்பதிவு முடிந்ததும் மாலையே வாக்குப்பெட்டி விமானம் மூலம் டில்லிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**வாக்கு மதிப்பு எவ்வளவு?**

எம்.பி., எம்.எல்.ஏக்கள் ஒவ்வொருவருக்கும் வாக்கு மதிப்பு உண்டு. அந்தவகையில் எம்.பி. ஒருவரின் வாக்கு மதிப்பு 700 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எம்.எல்.ஏக்களை பொறுத்தவரை மாநிலத்தின் மக்கள் தொகை அடிப்படையில் அவர்களின் மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

அதிகபட்சமாக உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஏல்.ஏ. ஒருவரின் வாக்கு மதிப்பு 208 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் எம்.எல்.ஏ. ஒருவரின் வாக்கு மதிப்பு 175 ஆக உள்ளது. மக்கள் தொகை குறைவாக இருக்கும் வடகிழக்கு மாநிலமான சிக்கிமில் எம்.எல்.ஏ. ஒருவரின் வாக்கு மதிப்பு 7 ஆக உள்ளது.

**தேர்தல் முடிவு**

இந்தத் தேர்தலில் எம்.பிக்களுக்கு பச்சை நிறத்திலும், எம்.எல்.ஏக்களுக்கு பிங்க் நிறத்திலும் வாக்குச்சீட்டுகள் வழங்கப்பட்டன. தேர்தல் பதிவான வாக்குகள் அனைத்தும் எதிர்வரும் 21ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றைய தினமே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

# கடன் வலையில் சிக்கியுள்ள நாடுகள்

அதீத கடன் காரணமாக இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியையும் அரசியல் குழப்பத்தையும் சந்தித்து வருகிறது. அரசு மேற்கொண்ட பல்வேறு தவறான முடிவுகளும் கொரோனா தொற்று பரவலுமே கடனுக்கான முக்கிய காரணமாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதாரம் முழுமையாக மீள்வதற்கு இன்னும் 4 ஆண்டுகள் வரையாகும் என சர்வதேச நிதியம் தெரிவித்துள்ளது. அதேவேளை, இலங்கையைப்போன்றே மேலும் சில நாடுகள் அதீத கடன் வலையில் சிக்கியுள்ளன.

இதே நிலை தொடர்ந்தால், அந்நாடுகளும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வாய்ப்புள்ளது. முக்கியமாக, உக்ரைன், டுனிசியா, கென்யா மற்றும் பெலாரஸ் உள்ளிட்ட நாடுகள் பெரும் கடனாளியாக உள்ளன.

**ஆர்ஜென்டீனா**

அதிக கடன்களைக்கொண்ட நாடுகளில் தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனா முதலிடத்திலுள்ளது. அந்நாட்டு பணமான பெசோவின் மதிப்பு பெருமளவில் சரிவடைந்துள்ளது. அந்நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பும் மிகக் குறைவாக உள்ளது.

**உக்ரைன்**

ரஷ்ய ஆக்கிரமிப்பு காரணமாக உக்ரைன் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.1.5 இலட்சம் கோடி மதிப்பிலான கடன் அந்நாட்டுக்கு உள்ளது. உலகின் மிகப்பெரிய முதலீட்டாளர்கள் உள்ளிட்டோர் உக்ரைனில் முதலீடு செய்துள்ளனர். அக்கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டிய நிலையில் உக்ரைன் உள்ளது. ஆனால், 2 ஆண்டுகளுக்கு கடன்களைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென உக்ரைன் அரசு, முதலீட்டாளர்களிடம் கோரி வருகிறது.

**டுனிசியா**

ஆபிரிக்க நாடான டுனிசியாவின் நிதிப் பற்றாக்குறை சுமார் 10 சதவீதமாக உள்ளது. அந்நாடு விரைவில் பெரும் கடனாளியாகும் என மோர்கன் ஸ்டான்லி நிறுவனம் தெரிவித்துள்ளது. கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்காக சர்வதேச நிதியத்தை (ஐஎம்எவ்) டுனிசியா நாடியுள்ளது.

**கானா**

அதிக கடன் காரணமாக கானாவின் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) விகிதம் 85 சதவீதமாக அதிகரித்துள்ளது. அந்நாட்டு பணமான சீடியின் மதிப்பு நடப்பாண்டில் கால் பங்கு குறைந்துள்ளது. வரி வருவாயில் பாதியானது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கே செலவிடப்படுகிறது. பணவீக்கமும் 30 சதவீதத்தை எட்டியுள்ளது.

**எகிப்து**

நாட்டின் கடன்-ஜிடிபி விகிதம் சுமார் 95 சதவீதமாக உள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்குள் அந்நாடு சுமார் ரூ.7,50,000 கோடி கடனை செலுத்த நேரிடும் என மதிப்பீட்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

**கென்யா**

வரி வருவாயில் 30 சதவீதத்தை கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கே கென்யா பயன்படுத்துகிறது. அந்நாட்டு அரசு வெளியிட்ட பத்திரங்களின் மதிப்பு பாதியளவுக்குக் குறைந்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால், அந்நாடு கடும் நிதி சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

**எத்தியோப்பியா**

சுமார் ரூ.7,500 கோடி கடனைக் கொண்டுள்ள எத்தியோப்பியாவுக்கு ஜி20 நாடுகள் கூட்டமைப்பு உதவியுள்ளது. அந்நாடு விரைவில் வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எல் சால்வடார்**

பிட்காயின் உள்ளிட்ட மெய்நிகர் நாணயங்களுக்கு அதிகாரப்பூர்வ அனுமதியளித்தாலும், எல் சால்வடாரின் கடன் மதிப்பு அதிகமாகவே உள்ளது. ஐஎம்எவ்-இன் உதவியை மறுத்ததால் அந்நாட்டின் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.

**பாகிஸ்தான்**

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு சுமார் ரூ.75,000 கோடியாகக் குறைந்தது. அதைக்கொண்டு 5 வாரங்களுக்கு மட்டுமே பொருட்களை இறக்குமதி செய்ய முடியும் சூழல் உருவானது. பாகிஸ்தானின் ரூபா மதிப்பு வரலாறு காணாத வகையில் சரிவடைந்துள்ளது. வரி வருவாயில் 40 சதவீதமானது வட்டி செலுத்தவே பயன்படுத்தப்படுகிறது. தற்போது ஐஎம்எவ்-இன் உதவி பாகிஸ்தானுக்குக் கிடைத்துள்ளது.

**பெலாரஸ்**

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு பெலாரஸ் ஆதரவளித்ததன் காரணமாக, மேற்கத்தேய நாடுகள் பெலாரஸ் மீது கடும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. அதனால், அந்நாட்டின் கடன் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சர்வதேச அளவில் கொரோனா தொற்று பரவல் இன்னும் கட்டுக்குள் வரவில்லை. உக்ரைன்-ரஷ்யா போர் காரணமாக சர்வதேச பொருளாதார சூழலும் நிலையில்லாமல் உள்ளது. அவற்றின் தாக்கம் அனைத்து நாடுகளிலும் பொருளாதார ரீதியில் எதிரொலித்து வருகிறது. உக்ரைன் மீதான போரை ரஷ்யா நிறுத்துவதும், மசகு எண்ணெய் விலை குறைவதுமே சர்வதேச பொருளாதாரத்தையும் பல நாடுகளின் நிதி ஆதாரத்தையும் வலுப்படுத்த உதவும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# பிரிட்டனை வாட்டும் வெப்பம்: தேசிய அவசர நிலை பிரகடனம்



நீர்நிலைகளில் தஞ்சமடையும் மக்கள்....

பிரித்தானியாவில் நிலவும் கடும் வெப்பத்தால் அங்கு தேசிய அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இரு நாட்களுக்கு ரயில் சேவைகள் இரத்துசெய்யப்பட்டன.

எதிர்வரும் நாட்களில் கடுமையான வெப்பம் நிலவும் என பிரித்தானிய வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அம்பியூலன்ஸ் உள்ளிட்ட உயிர் காக்கும் சேவைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இரு நாட்களுக்கு மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்றும், ரயில் உள்ளிட்ட பயணங்களை தவிர்க்குமாறும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

**வெப்ப அலைகளால் 90 கோடி பேர் பாதிக்கப்பட வாய்ப்பு - சீனா**

இதேவேளை, சீனாவில் அடுத்த 12 நாட்களுக்கு நிலவும் கடும் வெப்பம், அலைகளால் 90 கோடி பேர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

கடந்த மாதம் 13ஆம் திகதியிலிருந்து கடுமையான வெப்ப அலை வீசி வரும் நிலையில், வடக்கு சீனாவின் ஹெபய் மாகாணத்தில் மொத்தமுள்ள 71 தேசிய வானிலை ஆய்வு மையங்களில் பதிவான வெப்பநிலை முந்தைய சாதனைகளை முறியடித்துள்ளது. இதில், லிங்ஷூ நகரில் மட்டும் 44.2 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

# குதிரைகளுக்கு புனித நீராட்டு விழா



சீனாவின் உய்குர் தன்னாட்சி பகுதியில் பழங்குடியின மக்கள் தங்கள் தொழில் பங்காளனான குதிரைகளை புனித நதியில் நீராட்டும் விழா நடைபெற்றது.

நாடோடிகளாக வந்த பழங்குடியின மக்கள், வாழ்வாதாரம் அமைத்து தந்த குதிரைகளுக்கு விழா எடுத்துக் கொண்டாடுவதை மரபாக வைத்திருக்கின்றனர். இலி ((Ili)) நதியில் ஆயிரக்கணக்கான குதிரைகளைக்கொண்டு 300இற்கும் மேற்பட்ட உரிமையாளர்கள் புனித நீராடினர்.

# இராணுவப் பொருட்களுடன் உக்ரைன் விமானம் விபத்து



செர்பியாவிலிருந்து 11.5 தொன் இராணுவப் பொருட்களுடன் பங்களாதேஷ் நோக்கிச் சென்றுகொண்டிருந்த உக்ரைன் நிறுவனத்தின் சரக்கு விமானமொன்று கிரீஸில் வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

செர்பியாவில் தயாரிக்கப்பட்டு, பங்களாதேஷால் கொள்முதல் செய்யப்பட்ட ரொக்கெட் குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களை சோவியத் காலத்தில் தயாரிக்கப்பட்ட அந்த ஆன்டனோவ் ரக விமானம் மூலம் எடுத்துச் செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டது. இதில், விமானத்திலிருந்த 8 பணியாளர்களும் உயிரிழந்ததாகவும் அவர்கள் அனைவரும் உக்ரைன் நாட்டவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்துக்கும் உக்ரைனில் தற்போது நடைபெற்றுவரும் போருக்கும் தொடர்பில்லை என்று அவர்கள் தெரிவிக்கப்படுகின்றனர்.

# தெற்கு உக்ரைன் நகர் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்




உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துவரும் போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. கிழக்கு உக்ரைனில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த ரஷ்யா தீவிர முனைப்பு காட்டி வருகிறது.

அந்தவகையில் கிழக்கு உக்ரைனில் அரச படைகள் வசமுள்ள நகரங்கள் மீது இரவு, பகல் பாராமல் ஏவுகணைகள் மற்றும் பீரங்கி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன ரஷ்யப் படைகள். இதனிடையே போர் தொடங்கிய சமயத்தில் தெற்கு உக்ரைனில் ரஷ்ய கட்டுப்பாட்டிலுள்ள கிரிமியாவிற்கும் அந்த நாட்டின் முக்கிய துறைமுகமான ஒடேசாவுக்கும் இடையே கருங்கடல் பகுதியில் அமைந்துள்ள மைகோலைவ் நகரை கைப்பற்ற ரஷ்ய இராணுவம் தீவிரமாக முயற்சித்தது.

ஆனால், அப்போது உக்ரைன் படைகள் அதை முறியடித்தன. இந்நிலையில், மைகோலைவ் நகரை கைப்பற்றுவதற்கான முயற்சியில் ரஷ்யப் படைகள் மீண்டும் இறங்கியுள்ளன. அந்தவகையில் நேற்றுமுன்தினம் மைகோலைவ் நகர் மீது ரஷ்யப் படைகள் சரமாரியான தாக்குதல்களை தொடுத்தன. அந்த நகரிலுள்ள மிகப்பெரிய கப்பல் கட்டும் தளம் உட்பட தொழில்துறை கட்டமைப்புகள் மற்றும் பொது உட்கட்டமைப்புகளை குறிவைத்து தொடர்ச்சியாக ஏவுகணைகள் வீசப்பட்டன. எனினும், இந்தத் தாக்குதல்களில் ஏற்பட்ட உயிர்ச்சேதங்கள் குறித்த விவரங்கள் வெளியாகவில்லை.

# சூடானில் பழங்குடியினரிடையே மோதல்: 65 பேர் உயிரிழப்பு; 160 பேர் படுகாயம்



சூடானில் பழங்குடியின மக்களின் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலில் 65 பேர் உயிரிழந்துள்ளனர்.

ப்ளூ நைல் மாகாணத்தில் Hausa மற்றும் பிரிடா பிரிவு பழங்குடியின மக்களிடையே மோதல் மூண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு ஊரடங்கு மற்றும் பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டு, இராணுவ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டபோதும் இரு பிரிவு மக்கள் தங்களுக்குள் மோதிக்கொண்டனர்.

துப்பாக்கி மற்றும் கத்தியால் தாக்கியதில் 65 பேர் உயிரிழந்துள்ளதுடன், 160இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## வங்குரோத்து நிலைமைக்கு வந்துள்ளவரை

# ஜனாதிபதிக் கதிரையில் அமரவைக்கலாமா?



## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

**நேர்காணல்:**
**ஊடகவியலாளர் எஸ்.தனராஜ்**

***இலங்கையில் சூடுபிடித்துள்ள சமகால அரசியல் நிலைமை குறித்து கனேடிய தொலைக்காட்சியொன்றுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வழங்கிய சிறப்புப் பேட்டி.***

**Q இலங்கையில் அரசியல் மாற்றம் நடந்துகொண்டிருக்கின்றது. கட்சித் தலைவர்கள் கூட்டங்களில் உங்களைக் காண்கின்றோம். இப்போதைய நிலைமை பற்றி சுருக்கமாக விளக்க முடியுமா?**

பதில் : நாட்டில் ஏற்பட்டிருக்கும் புரட்சிகரமான அரசியல் மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணம், மக்களின் உணர்வுகளைச் சரிவர புரிந்துகொள்ள முடியாமல், ஆட்சியாளர்கள் தன்னிச்சையாக, மிகவும் மோசமாக அவர்களின் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்னிறுத்தி, நாட்டின் எதிர்கால சுபீட்சம் சம்பந்தமாக என்னதான் அவர்கள் அவர்களின் விஞ்ஞாபனத்தில் சொல்லியிருந்தாலும், தத்தமது குடும்பங்களை வளர்த்துக் கொள்வதற்காக குறிப்பாக, ஒரு குடும்ப ஆட்சி என்ற போர்வையில் கொண்டுவந்த மிக மோசமான நடைமுறைகளை மக்கள் வெறுத்தொதுக்கியிருக்கின்றார்கள். ஊழல் விவகாரங்கள் என்பனவும் மிக மோசமாக மக்களை இந்த பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளன. அவை குறித்த சரியான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். பலவிதமான உணர்வுகளோடும் ஒட்டுமொத்த சிவில் சமூகமும் வீதியில் இறங்கிப் போராடுகின்ற ஒரு நிலைமை உருவாகிய இந்தப் பிராந்தியத்திலேயே இவ்வாறானதோர் மக்கள் எழுச்சி என்னைப் பொறுத்தமட்டில் இந்தியாவில் அனா அஸாரே ஆரம்பித்த ஓர் இயக்கம் எப்படி வளர்ச்சியடைந்து முன்னேறி வந்ததோ, அதேபோல் வித்தியாசமாக, அதைவிடவும் ஒரு படி மேலே போய் ஆட்சியில் இருப்பவர்களை பலவந்தமாக வீட்டுக்கு அனுப்புகின்ற ஒரு பாரிய சாதனையாக மாறியிருக்கிறது.

**Q இப்போது நாடாளுமன்றத்தில் ஓர் அரசியல் சூதாட்டம் அல்லது சதுரங்க ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கட்சியில் எதிர்கால பார்வை என்ற நோக்கில் தீர்மானங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். பொதுவாக ரணில் விக்ரமசிங்கவாக இருக்கலாம் அல்லது ஏனைய கட்சிகளாக இருக்கலாம். சட்ட ரீதியான ஏற்பாடுகள் இருக்கத்தக்கதாக, ஜனாதிபதி பதவி விலகுவாராக இருந்தால் இராஜினாமா கடிதம் கிடைக்குமாக இருந்தால் அரசியல் யாப்பின்படி பிரதமர் இயல்பாகவே ஜனாதிபதியாகக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா? அதற்கான எதிர்ப்புகள் எவ்வாறு இருக்கின்றன? 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் என்ன நடக்கும்?**

பதில் : ஜனாதிபதி பதவி விலகுவாராக இருந்தால் சட்ட ஏற்பாடுகளின்படி இருக்கின்ற பிரதமர் தற்காலிகமாக பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்றதாக ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு பதவிப் பிரமாணம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. இதுதான் சட்டத்தின் ஏற்பாடு. அப்படி இருந்தபோதிலும், அப்படி அவர் பதவியேற்று 30 நாட்களுக்குள் அடுத்த ஜனாதிபதியை தெரிவுசெய்ய வேண்டும். எனவே, அவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்தால் மாத்திரமே பதில் ஜனாதிபதி என்ற பதவியை ஜனாதிபதியின் எஞ்சிய காலத்திற்கு பதவி வகிக்க முடியும். இல்லையென்றால் ஆகக்கூடியது 30 நாட்கள். எங்களைப் பொறுத்தமட்டில் 30 நாட்கள் கூட பதில் ஜனாதிபதியாக பதவி வகிக்க ரணில் விக்ரமசிங்கவை அனுமதிக்க முடியாது. ஏனென்றால், ஒட்டுமொத்த மக்களின் கோரிக்கையும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கையும் ரணில் விக்ரமசிங்கவும் இந்த அரசியல் மற்றும் பொருளாதார சீரழிவுக்குக் காரணம் என்பதுதான். அதுவும் குறிப்பாக, ராஜபக்ஷ குடும்பத்தை காப்பாற்றுவதற்குத்தான் அவர் பிரதமர் பதவியை எடுத்தார் என்ற ஆத்திரமும், ஆவேசமும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை வெகுவாகப் பாதித்து இருக்கிறது. எனவேதான் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

**Q 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றதா?**

பதில் : நிச்சயமாக. அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.அது மாத்திரமன்றி, அது நடைபெற்றேயாகவேண்டும். ஏனென்றால், சபாநாயகர் இந்த விடயத்தை இன்னும் இழுத்தடிக்க முடியாது. சபாநாயகரே இந்த விவகாரம் சம்பந்தமாக சட்ட மா அதிபரிடம் பதவி விலகாமல், தொடர்ந்தும் இந்த ரணில் விக்கிரமசிங்கவின் பதில் ஜனாதிபதி நியமனத்துடன் காலத்தை இழுத்தடித்துக்கொண்டுபோனால் அது பேரம்பேசும் உத்தியாகத்தான் கருதப்படும். மனித உரிமை காரணமாக, அதாவது, ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றவரை எதேச்சையாக வேறு நாடொன்றில் கைதுசெய்யப்பட முடியாது. இந்த ஜெனீவா சாசன அடிப்படையிலான இராஜதந்திர நியமங்களுக்கேற்ப அதை இவர் ஒரு பேரம்பேசும் விடயமாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு விமானத் தளத்திலும் இருந்து எங்காவது ஒரு நாட்டுக்கு புகலிடம் கிடைக்குமா என்று ஆராய்ந்துகொண்டு திரிகின்ற ஒரு விடயமாகத்தான் இருக்கின்றது. எனவே, ஏதாவது ஒரு பலமான நாடு தலையிட்டு, அவர்களின் அரசியல் பலத்தைப் பயன்படுத்தி இன்னொரு நாட்டில் தற்காலிகமாக அவருக்கு வசிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வார்களா என்ற விடயத்தை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அப்படி நடப்பதற்கு சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவு என்றே நான் நினைக்கின்றேன்.

**Q நாடாளுமன்றத்தில் பல பெயர்கள் முன்வைக்கப்படுகின்றன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு யாருக்கு என்று கூற முடியுமா?**

பதில் : எங்களை பொறுத்தமட்டில் நாங்கள் மிகத் திறந்தமனதோடு இருக்கின்றோம். குறிப்பாக, முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு சிநேகக் கட்சியினர். நாங்கள் ஒரே கூட்டணியில் இருப்பவர்கள். எனவே, அதன் சார்பில் ஒரு வேட்பாளரை முன்வைப்பார்களானால், அவருக்கு ஆதரவளிப்பதையே எங்களின் முதன்மை கடமையாக கருதுவோம். இது சம்பந்தமாக கட்சி மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவேண்டும். இந்த விவகாரம் தொடர்பில் இன்று காலை நடந்த பேச்சு வார்த்தையில் தியாக மனப்பான்மையோடு சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, இந்த பதவிப் போட்டி என்ற விவகாரத்தை விட்டு விட்டு பிரதான பதவிகள் இரண்டில் ஒன்றை எடுப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறப்பட்டது. இந்தப் பதவிதான் வேண்டும், ஜனாதிபதி கதிரை என்பதும் அதனால் 20ஆம் சட்டத்திருத்தத்துக்கு இருக்கும் அதிகபட்ச அதிகாரங்களைப் பாவிக்கலாம் என்ற நப்பாசையும் ஒருசிலருக்கு இருந்திருக்கலாம். எதுவாகவிருந்தாலும், மக்கள் போராட்டத்துக்குப் பின்னர் இந்த அதீதமான அரசியல் பலத்தை ஒரு தனிநபராக இருந்துகொண்டு பிரயோகிக்கலாம் என்ற சூழ்நிலை இப்பொழுது இல்லை. அப்படிச் செய்யப்போனால் ஜனாதிபதிக்கு நடந்ததுதான் நடக்கும். ஆகவே, இந்த விவகாரத்தில் யாரும் பதவி ஆசையில்தான் கதிரையில் அமர வேண்டும் என்பதற்காக ரணில் விக்ரமசிங்க மாத்திரம்தான் இருப்பதாக நான் காண்கின்றேன். அவர் மட்டுமே நாட்டில் இருக்கின்ற கள நிலைவரங்களைக் கண்டுகொள்ளாமல், யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் ஏதோ தனக்குக் கிடைத்திருக்கும் இந்த அதிர்ஷ்டத்தை விட்டுக்கொடுக்கக் கூடாது என்ற ஒரு விதமான முரட்டுப் பிடிவாதத்தில் இருந்து கொண்டிருக்கின்றார். இதனால் அவருக்கு தனிப்பட்ட இழப்புகளும் நடந்தாகிவிட்டன. ஆனால், அது முடிந்த பிறகு இன்னும் இரட்டிப்பு மடங்காக இந்த விடயத்தில் ஆர்வமாக இருந்துகொண்டிருப்பதும், இந்த விடயத்திற்காக ஆளும் கட்சியில் இருக்கின்ற இன்று அரசியல் வங்குரோத்து நிலைமைக்கு வந்திருக்கின்ற ஒரு கும்பலை வைத்துக்கொண்டு "உங்களின் பாதுகாப்புக்கு நான் உத்தரவாதம் அளிக்கின்றேன். நீங்கள் எல்லோரும் எனக்கு ஆதரவாக இருப்பீர்களேயானால், நான் ஜனாதிபதி ஆகிவிட்டு உங்களை பாதுகாப்பது மட்டுமன்றி இந்த நாட்டு பொருளாதார பிரச்சினைகள் சர்வ சாதாரண விடயம்" என்கிறார். இவ்வளவு காலம் இருந்து செய்யமுடியாத ஒருவர் இனியும் சாதிப்பாரா என்பதில் எந்த எதிர்பார்ப்பும் இல்லை.

அவரிடம் சில திறமைகள் இருந்தன. திறமைகள் இருந்துமட்டும் போதாது. மக்கள் அங்கீகாரம் வேண்டும். மக்களின் உணர்வுகளை மதிக்கத் தெரியாத ஒருவர் இப்படி பிடிவாதமாக கதிரையில் இருந்துகொண்டு அவரின் வீட்டை எரித்தவுடன், நான் போட்ட ட்விட்டர் பதிவுதான் அதற்குக் காரணம் என்று சொல்கின்ற அளவுக்கு மிகவும் மோசமான வங்குரோத்து நிலைக்கு வந்திருக்கின்ற ஒருவர்தான் இந்தக் கதிரையில் பிடிவாதமாக அமர்ந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். எனவே, அவருடைய அரசியல் ஆயுட்காலம் ஒருசில நாட்களுக்குதான் நீடிக்கும் என்பது எனது ஊகம்.

**Q ஜனாதிபதி கதிரையில் அமர்வதற்கு பெரிதாக யாரும் ஆசைப்படவில்லை என்கிறார்கள். ஆனால், ரணில் விக்ரமசிங்க போலவே இன்னும் சிலரைக் களத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. சரத் பொன்சேகா உள்ளிட்ட சிலர் களத்தில் இருந்து பேசும்போது இவ்வாறான ஓர் ஆசை ஆர்வம் இருக்கின்றது. வெளியில் சொல்லாமல் நிறையப் பேர் இருக்கின்றார்கள். நான் கேட்க வந்த விடயம், இம்முறை ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களாக நாடாளுமன்றத்தில் வந்தால் குறிப்பாக, 3 பேர் வந்தால் நிச்சயமாக தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளின் வாக்குகள் யார் ஜனாதிபதியாக போகின்றார்கள் என்ற விடயத்தை தீர்மானிப்பதாக இருக்கும். தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு இடையில் ஏதாவது கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்கின்றனவா?**

பதில் : நிச்சயமாக. எமக்கு மத்தியில் நிறைய கருத்து ஒருமைப்பாடு இருக்கின்றது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் நாங்கள் கூடி ஒரு முடிவுக்கு வரலாம். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில், ஒரு சர்வகட்சி ஆட்சி அமைவதென்பது எல்லா கட்சிகளும் சேர்ந்து அமைந்தால்தான் இன்று இருக்கின்ற பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மீள்வதற்கு மிக வசதியாக இருக்கும். ஏனென்றால், எங்களுக்குள் இருக்கின்ற இந்த மாமூல் அரசியல் போட்டியினால் அடுத்து வருகின்ற காலத்தில் ஏற்படக்கூடிய மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு மிக கடினமான முடிவுகளை எடுக்கவேண்டி வரும். எனவே, இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றபோது நாடாளுமன்றத்துக்குள்ளேயே அதிகபட்ச கருத்தொற்றுமையாவது இல்லை என்றால், இந்த நாட்டின் பொருளாதாரம் இன்னும் சீரழிந்துவிடும். எனவே, எங்களுக்குள் முதலில் கட்சிகளை விடுத்து நாட்டைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய அவசியம் இருக்கின்றது. நாம் இந்த கட்சி அரசியலை தேர்தல்கள் வரும்போது பார்த்துக்கொள்ளலாம். இதைதான் நான் தொடர்ந்தும் சொல்லி வருகின்றேன். யாரும் பதவிகளுக்கு ஆசைப்படாமல் நாங்கள் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்து எப்படியாவது நாட்டை மீட்டெடுப்பதற்கு, நாட்டு மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய வகையில் எங்களின் தெரிவுகள் இருக்கவேண்டும். நாட்டு மக்களும் அவர்களுக்கு மத்தியில் இருக்கின்ற எதிர்பார்ப்புகள் எல்லாம் அப்படியே பாழடையக்கூடிய நிலையில் ஒரு விரக்தி நிலைக்கு வந்திருக்கின்றார்கள்.

இந்த விரக்தி நிலையின் உச்சக்கட்டம்தான் இந்த ஆர்ப்பாட்டத்தின் ஆவேசமும் அதன் எதிர்விளைவுகளுமாகும். எனவே, இதை நாம் அனைவரும் புரிந்துகொண்டு இப்போதாவது மாமூல் அரசியலைக் கொஞ்சம் பின்னால் வைத்துவிட்டு நாட்டை முன்னிலைப்படுத்தி எப்படியாவது நாட்டை பொருளாதார சிக்கலிலிருந்து விடுவிப்பதற்கு முயற்சிப்போம். பொருளாதார ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு அரசியல் ஸ்தீரத்தன்மை அதி பிரதானமாகும். அது இல்லாமல் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வார்த்தைகளும் பெரிதாக வெற்றியைத் தரப்போவது இல்லை. இவற்றை உணர்ந்துகொண்டு, நட்புநாடுகளிடமிருந்து கிடைக்கின்ற உதவிகளை சரிவர பெற்றுக்கொள்வதற்கு நாம் எதாவது செய்யவேண்டும். வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் வெளிநாட்டு செலாவணியை - அவர்கள் ஈட்டுகின்ற பணத்தை அனுப்புவதற்கு அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

நாட்டை முன்னிறுத்தி ஓர் அர்ப்பணிப்புடனான அரசியலை செய்வதற்கு இன்று நாடாளுமன்றத்தில் இருக்கின்ற அரசியல்வாதிகள் முன் வருவார்களா என்ற ஏக்கம் அவர்களிடம் இருக்கின்றது. அது நடந்தால்தான் இவை அனைத்தும் நடக்கும். முதலீடுகள் கூட வரலாம். இந்த பிரளாட்சியில் இருந்து மீள்வது பெரும் சிக்கல் நிறைந்தது. நீண்ட காலம் எடுக்கும். இவ்வளவு காலம் தாழ்த்தியதால் சிக்கல் கூடிவிட்டது. இருந்தாலும் இந்த நாடு சகல வளங்களையும் கொண்ட நாடு. மிக முக்கியமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்து சமுத்திரத்தில் இருக்கின்ற நாடு.

எனவே, நாங்கள் இந்த கேந்திர முக்கியத்துவத்தையே சந்தைப்படுத்தி பல விடயங்களை சாதிக்கலாம். இப்படியெல்லாம் இருக்கும்போது நாம் பெரிதாக அச்சப்பட வேண்டியதில்லை. ஆயினும், சிரமங்களை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், அதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். மனம் திறந்து அவர்களுடன் பேச வேண்டும். அதை செய்வதற்கு எங்களுக்குள் ஒற்றுமை வேண்டும். இன்று பெருமளவு நம்பிக்கையொன்று ஏற்பட்டிருக்கின்றது. நாளை 10 மணிக்குள் குறைந்தபட்சம் வேறு யாரும் சவாலுக்கு உட்படுத்த முடியாதவாறு ஒரு நபரின் பெயரை நாம் அனைவரும் கூடி பிரேரிக்கலாம். அது சர்வகட்சி முயற்சியாக அமையக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அப்படி அமையாவிட்டாலும், ஓரிரு கட்சிகள் மாத்திரம் உடன்பாட்டில் இருந்து தவிர்ந்துகொண்டாலும், அதிகபட்ச நாடாளுமன்ற ஆசனங்கள் அந்த ஒருவருக்கு வரலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. காரணம், யாரும் அந்த ஜனாதிபதி பதவியை தவிர, வேறு எந்த பதவியும் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்து ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இதுதான் இதற்கான முக்கியமான காரணம். எனவே, பிரதமருக்கான பெயரைப் பிரேரிப்பது சிக்கலை தாராது என்று நான் நினைக்கின்றேன்.

**Q கேள்வி : சர்வகட்சி பொறுப்புகளை கூறுவீர்களா?**

பதில் : சர்வகட்சி பொறுப்புகளை எடுக்க இயலாது என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், நாங்கள் எல்லோரும். பொதுவாக கட்சித் தலைவர்கள் விட்டுக்கொடுப்பபுகளை செய்யவேண்டும் என்றுதான் நான் சொல்கின்றேன். எங்களை விடவும் தகுதியானவர்கள் இருந்தால், அல்லது "எங்களால் குறித்த விடயத்தை சாதிக்க முடியும்; எங்களுக்கு தாருங்கள்" என்று கூறுவார்களாக இருந்தால் விட்டுக்கொடுப்பது என்பதுதான் இன்று இருக்கின்ற நிலைமையில் பொருத்தமானது. ஏனென்றால் யாரும் பதவிக்கு அவசரப்பட வேண்டிய அவசியம் இல்லை. அனைவருக்கும் மக்கள் ஆணை வரிதாகி இருக்கின்ற நிலைவரம். யாரிடத்திலும் மக்கள் ஆணை இல்லை. மக்கள் ஆணையை பெற்றுவிட்டு வந்து செய்வதுதான் சாலப் பொருத்தமானதாக இருக்கும். இப்போது எதிலும் அவசரப்படாமல் பொருத்தமானவர்கள் பிடிவாதமாக இருப்பார்களானால் அவர்களுக்கு விட்டுக் கொடுத்துவிட்டு, நாம் அனைவரும் ஒன்றாக நின்று அவர்களுக்கும் ஆதரவை கொடுத்து விட்டு சகல கட்சிகளை சேர்த்து தலைவரின் நெறிப்படுத்தில் அமைச்சரவை தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை தீர்மானித்து இருக்கிறோம்.

எனவே, நாங்கள் அமைச்சரவைக்குள் இருந்துகொண்டுதான் செய்ய வேண்டும் என்ற நியதியும் கிடையாது. நாங்கள் நாட்டின் பொருளாதாரத்தை சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்கான ஒரு தீவிர முயற்சியை கட்சித் தலைவர்கள் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அப்படியான பொறிமுறையை நாம் ஏற்படுத்தி இருக்கின்றோம். எனவேதான் இதில் நாங்கள் யாரும் தனிப்பட்ட முறையில் எமது விருப்பு வெறுப்புக்கு அப்பால் இந்த விடயத்தை அணுகுவதுதான் இந்த காலகட்டத்தில் நாங்கள் இந்த போராட்டத்தைச் செய்த நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு கௌரவம் அளிப்பதாக அமையும் என்பதுதான் எனது நிலைப்பாடு. அதன்படி நாம் செயல்படுவோம்.

# முதல் முறையாக சம்பியன் மகுடம் சூடிய றப்பானியாஹ் வி.க.


















காத்தான்குடி பர்மாண்ஸ் நட்புறவு ஒன்றியத்துடன் இணைந்து றப்பானியாஹ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பர்மாண்ஸ் சம்பியன்ஸ் கிண்ணம் 2021 – 2022 மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் சம்பியனாக றப்பானியாஹ் விளையாட்டுக் கழகம் மகுடம் சூடியது.

கடந்த 2020ஆம் ஆண்டு மிகப் பிரமாண்டமான முறையில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த பர்மாண்ஸ் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற ஹூஸைனியா விளையாட்டுக் கழகத்தினை அரையிறுதிப் போட்டியில் வீழ்த்திய றப்பானியாஹ் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டியில் குபா விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இவ்வாறு சம்பியன் பட்டத்தை வென்றது.

2020ஆம் ஆண்டைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டு பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடுசெய்யப்பட்ட குறித்த தொடரானது, முழு உலகிலும் ஏற்பட்ட கொவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. அந்தவகையில் 2021 – 2022 ஆகிய இரு ஆண்டுகளை இணைத்து இந்த வருடம் தொடர் நடைபெற்றது. முதல் தொடரில் பங்கேற்ற இரு அணிகள் விலகிய நிலையில், அதற்கு மாற்றாக இரு அணிகள் இணைக்கப்பட்டு நான்கு குழுக்களில் மொத்தமாக 16 தலைசிறந்த அணிகள் பங்கேற்றன.

கடந்த வியாழக்கிழமை காத்தான்குடி விக்டெரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை அதே மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமானது. சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் இஃப்ராஸ் இஸ்மாயில் தலைமையிலான றப்பானியாஹ் விளையாட்டுக் கழகமும், சுஜாத் அஹமட் தலைமையிலான குபா விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற குபா அணியின் தலைவர் சுஜாத் அஹமட் களத்தடுப்பினை தெரிவுசெய்ய முதலில் ஆடிய றப்பானியாஹ் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 83 ஓட்டங்களைக் குவித்தனர். துடுப்பாட்டத்தில் றிம்ஸி 8 பந்துகளில் 21 ஓட்டங்களை தெறிக்கவிட்டார். பந்துவீச்சில் அப்ரார் இரு ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

84 என்ற கடின இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய குபா அணியினால் நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 64 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. நிப்ராஸ் 23 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். இதனடிப்படையில் றப்பானியாஹ் விளையாட்டுக் கழகம் 19 ஓட்டங்களினால் முதல் முறையாக சம்பியன் மகுடத்தை முத்தமிட்டது.

தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக குபா அணியின் பெரோஸ் நஜீம், சிறந்த துடுப்பாட்ட வீரராக குபா அணியின் நிப்ராஸ் ஜன்கீர், இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக றப்பானியாஹ் அணியின் பருஸ் அஹமட், தொடரின் ஆட்டநாயகனாக றப்பானியாஹ் அணியின் மொஹமட் சபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக குறுக்கல்மடத்தின் இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் உதயகுமார கலந்து கொண்டதுடன், விஷேட அதிதிகளாக காத்தான்குடி நகர முதல்வர் எஸ்.எச்.எம் அஸ்பர், பிரதி முதல்வர் எம்.ஐ.எம் ஜெஸீம், சட்டத்தரணி எம்.ஐ அஜ்மீர் ஹாஜா நவாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த தொடருக்கு தமிழன் நாளிதழ் அச்சு ஊடக அனுசரணையை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

















## வெண்கலத்துடன் ஓய்வை அறிவித்த நட்சத்திர வீராங்கனை

அமெரிக்காவின் ஒரேகான் நகரில் நடைபெற்றுவரும் உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 4X400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் அமெரிக்க நட்சத்திர வீராங்கனை அலிஸன் பெலிக்ஸ் வெண்கலப் பதக்கத்துடன் ஓய்வுபெற்றார்.

நிகழ்கால தடகள அரங்கில் மிகச் சிறந்த வீராங்கனையான அலிஸன் பெலிக்ஸ் 7 ஒலிம்பிக் தங்கம், 12 உலக தடகள சம்பியன்ஷிப் தங்கப் பதக்கங்களை வென்றவராவார். ஒட்டுமொத்தமாக உலக சம்பியன்ஷிப்பில் 19, ஒலிம்பிக்கில் 11 பதக்கங்களை வென்றுள்ளார் அலிஸன்.




## சந்திமாலின் பொறுப்பான ஆட்டத்துடன் 333 ஓட்டங்கள் முன்னிலையில் இலங்கை

பாகிஸ்தான் அணியுடன் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை அணி நேற்று மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 333 ஓட்டங்கள் முன்னிலை வகிக்கிறது.

முன்னதாக முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 222 ஓட்டங்களை குவித்த நிலையில், பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய பாகிஸ்தான் அணி 218 ஓட்டங்களை குவித்தது. 4 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவருகின்ற இலங்கை அணி நேற்றைய நாள் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 329 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஓசத பெர்ணான்டோ மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் அரைச்சதம் விளாச, தினேஷ் சந்திமால் அரைச்சதம் விளாசி இறுதிவரை ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் சற்று முன்னதாக இடைநிறுத்தப்பட, இன்று 4ஆவது நாள் ஆட்டம் சற்று முன்னதாக காலை 9.45 மணிக்கு ஆரம்பமாகிறது.




தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

## வ்ரவேரியன் வோர் –19 சம்பியன் பட்டத்தை வென்றது
## சம்மாந்துறை விளையாட்டுக் கழகம்

(மாளிகைக்காடு நிருபர்)



சாய்ந்தமருதின் மூத்த விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான வ்ரவ் லீடர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் கொரோனா காரணமாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கிழக்குமாகாண 32 முன்னணிக் கழகங்கள் பங்குபற்றிய வ்ரவேரியன் வோர் -19 இருபதுக்கு 20 கடினபந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் சம்பியன் பட்டத்தை சாய்ந்தமருது பீமா விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் தனதாக்கிக்கொண்டது.

சாய்ந்தமருது அஷ்ரப் ஐக்கிய பொது விளையாட்டு மைதானத்தில் வ்ரவ் லீடர்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவரும், மாவட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளருமான ஏ.எம்.றிபாஸ் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

135 எனும் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பீமா விளையாட்டுக் கழகம் 18.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டும் பெற்று 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக 33 ஓட்டங்களைப் பெற்றதுடன், எதிரணியின் நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்திய சம்மாந்துறை விளையாட்டுக் கழக வீரர் எஸ்.எம்.அப்ஹாம் தெரிவுசெய்யப்பட்டதுடன், தொடராட்டக்காரராக நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழக வீரர் நிக்ஸி அஹமட் தெரிவானார்.

இப்போட்டிக்கு கொழும்பு மாவட்ட வாகன போக்குவரத்து பிரதம பரிசோதகரும், சுற்றுத்தொடரின் பிரதான அனுசரணையாளருமான பொறியியலாளர் ஏ.எல்.எம்.பாரூக் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், முக்கியஸ்தர்கள் பலரும் அதிதிகளாக கலந்துகொண்டு வெற்றிக் கேடயத்தையும், பரிசில்களையும் வழங்கினர்.

இந்த மைதானத்தில் இவ்வருடம் நடந்து முடிந்த சகல சுற்றுத்தொடர்களிலும் பலம்வாய்ந்த அணிகளை வீழ்த்தி சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தினர் தொடர்ச்சியாக மூன்று சம்பியன் பட்டங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7